ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஶ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்

மலர்: 3 சித்திரை - புரட்டாதி 1996 இதழ்: 6

## சாயி அநுபவங்கள் சிறப்பிதழ்,

பொருளடக்கம்


| | |
|---|---|
| பகவானின் அருளுரை - எல்லா மதங்களையும் ...... | 1 |
| நானிருக்கப் பயமேன் | 3 |
| ஆக்குவாய், காப்பாய், அருள் தருவாய்... | 4 |
| எங்கிருந்தோ வந்தான்... நண்பனாய்... சேவகனாய்... | 7 |
| சேவைக்கு சுவாமியின் தூண்டுதல் | 9 |
| 1996 சத்திய ஆண்டு | 10 |
| ஒரு புதிய ஆரம்பம் | 11 |
| ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள் | 13 |
| மாணவர் பகுதி: பகவானின் மடல் | 15 |
| இனிமையான பேச்சு; பிரியமான குதிரை | 16 |
| கசப்பான பேச்சு | 17 |
| பிரசாந்தி நிலையத்திலிருந்து ஓர் கடிதம் | 18 |
| கோடைக்கானலில் - சாயி உபநிஷதம் | 20 |
| சாயி நிறுவனச் செய்திகள் | 22 |



தனிப்பிரதி ரூபா 25/-

வருடச் சந்தா (தபாற் செலவுடன்)

இலங்கையில் ரூபா 80/-

வெளிநாடுகளில் U S $ 7/-

காசோலை, பணக் கட்டளைகள்: Co-ordinating Committee
Sri Sathya Sai Organisation
(Northern Zone)

'வடபிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு' என்ற பெயரில் எழுதப்பட்ட ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.



ஆசிரியர் குழு
Dr. எம். கே. முருகானந்தன் (ஆசிரியர்)
ஸ்ரீ கி. சிவநேசன் (உதவி ஆசிரியர்)
ஸ்ரீ S. R. சரவணபவன்
ஸ்ரீ R. வசந்தசேனன்

சகல தொடர்புகளும்:
ஆசிரியர், சாயி மார்க்கம்
Dr. எம். கே. முருகானந்தன்
மருதடி, பருத்தித்துறை.
ஸ்ரீலங்கா.

ஓம் சாயிராம்

பகவானின் அருளுரை

# எல்லா மதங்களையும் சமமாக மதியுங்கள்

— பகவான் பாபா —

## மனம், மதி, மதம்

உலகம் பஞ்ச பூதங்களின் ஆதாரம் என்பதை உணர்த்துவதே மனம். மனத்திலிருந்து வெளிப்படுவது மதி. மதியினின்று பிறந்தது மதம். மதம் என்பது சாதாரணமாக எதை நாம் *Religion* என்று குறிப்பிடுகின்றோமோ அதை அல்ல. ஆன்மீக ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றைக் குறிப்பிடுகிறோம். இத்தகைய கட்டுப்பாடுகளைத் தகர்த்து, இதை விட்டு வெளியேற பலர் முயற்சி செய்கிறார்கள். அதன் மூலம் அழிவது மதம் அல்ல, மனம் தான். மனம் அழிந்தால் மனிதன் நாசமாகிறான். ஆக அழிப்பது மதமல்ல. மதத்தின் மேல் வைக்கும் வெறுப்பு. *Religious Hatred* தான்.

எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், பஞ்சபூதங்களை நம்புகிறார்கள். அதன் படி நடக்கிறார்கள். அவற்றை வழிபடவும் செய்கிறார்கள்.

பஞ்சபூதங்களிலும் தெய்வம் உள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, அதன்படி இயற்கையை தெய்வமாக வணங்குவதில் தவறென்ன? புத்தியுள்ளவர்கள் சிந்திக்கட்டும்.

எந்த மதத்தையும் நாம் விமர்சிக்கக் கூடாது. எல்லா மதங்களும் கூட்டாகப் போதிப்பது நல்ல விசயங்களையேதான். நாம் புத்திசாலிகளாக நடந்து கொள்ள வேண்டும், உங்கள் மனம் நல்லதாக இருந்தால் எந்த மதம் கெட்டது?

## மனம் தூய்மைப்பட வேண்டும்

நாம் நம் மனத்தைத்தான் கெடுத்துக் கொள்கிறோம், மதத்தை அல்ல. தற்போது மனிதனுக்குப் போதனை தேவையில்லை. மனத்திற்குத்தான் அது தேவை, மனம் ஒழுங்கானால் மனிதனும் நேராவான் ஆகையால் மனிதன் தூய்மையான மனத்தையும், புனிதமான உணர்வுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த உலகில் உள்ளது ஒன்றே ஒன்று தான். அதற்கு இரண்டாவது என்பது எதுவும் இல்லை. எது இருக்கிறது என்கிறாயோ அது இல்லை. எது இல்லை என்கிறாயோ அது இருக்கிறது. கடவுள் மட்டுமே இருக்கிறார். உன் உணர்வுகள் தான் மாற வேண்டும். கடவுள் இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் ஒன்றே ஒன்றுதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஹிந்து, முஸ்லீம், பார்ஸி, ஜைனர்கள், புத்தர்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் கடவுள் ஒன்றேதான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஒருமையுணர்வு வளர வேண்டும்

மனிதன் எப்போது தன் மனதில் இரக்கம், ஒருமையுணர்வு, சகிப்புத் தன்மை இவற்றை வளர்த்துக் கொள்கிறானோ அப்போது நிச்சயம் சகோதரத்துவமும் அமைதியும் நிலவும். இந்த ஒருமையுணர்வு அனைவரும் ஒன்றேதான் என்கின்ற உணர்ச்சி எழும்போது, நம்மிடையே எவ்வித கலகத்துக்கும் இடமில்லை.

ஆத்மா ஒன்றுதான் என்கிற உண்மையான உணர்வுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுதும் பல அங்கங்களால் ஆக்கப்பட்டது. அவற்றின் ஒருங்கிணைந்த இணைப்பே உலகம்.

தற்போது பாரததேசம் பலவித தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கிறது. பாரதம் மட்டுமல்ல, உலகில் எல்லா நாடுகளும், இத்தகைய அல்லல்களால் தொல்லைப்படுகின்றன. காரணம், ஒருமையுணர்வு, அனைவரும் ஒன்றே என்கிற 'ஏகாத்ம பாவம்' இல்லாமல் போனது தான். இத்தகைய ஒருமையுணர்வினால் மட்டுமே, உலகம் தழுவிய அன்பு உண்டாகும். அந்த அன்புதான் மனித குலத்தை இணைக்கும் சக்தி. அது இதயத்திலிருந்து வெளிப்பட வேண்டும். அப்போது தான் உண்மையான அன்பாக அது இருக்க முடியும்.

## மற்றைய மதங்களையும் மதிக்க வேண்டும்

என் மதம்தான் உயர்ந்தது. உன் மதம் தாழ்ந்தது என்று பேசப்படுகிறது. யாருக்கும் இப்படிச் சொல்ல உரிமை இல்லை. உன் மதம் எவ்வளவு உயர்ந்ததோ அத்தனை உயர்ந்தது மற்றவர்களுடைய மதமும். உன் தாய் எவ்வளவு மரியாதைக்குரியவளோ அவ்வளவு மரியாதை மற்றத் தாய்மார்களுக்கும் தரப்பட வேண்டும். தாயை நீ பூஜை செய். மரியாதை செய். ஆனால் அடுத்தவருடைய தாயை அவமதிக்காதே! அதே போல் நீ உன் மதத்தைப் போஷித்துக் கொள். பாராட்டிக் கொள். ஆனால் மற்றவர் மதத்தை இழிவு படுத்தாதே! இத்தகைய அறிவின்றி மனிதன் பைத்தியம் பிடித்து அலைகிறான். இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், எல்லோரும் புரிந்து கொண்டால், இந்த உலகத்தில் கலகங்களுக்கும் குழப்பங்களுக்கும் இடமிருக்காது.

## அமைதி எங்கே?

மனிதன் சாந்திக்காக, மன அமைதிக்காக எங்கெங்கோ அலைகின்றான். எங்கே உள்ளது சாந்தி? வெளி உலகத்தில் உள்ளதா சாந்தி? இல்லை இல்லை *peace* என்கிற சாந்தி நம்முள்ளேதான் இருக்கிறது. வெளியே காண்பதெல்லாம் *pieces*, *pieces* என்கிற துண்டு துண்டாகிப் போனவை தான். நம்முள் இருக்கும் அமைதியை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

''ஸத்யம் நாஸ்தி பரோ தர்ம:''

ஸத்யத்தை விட உயர்ந்த தர்மம் வேறு எதுவும் இல்லை. நமக்குப் பயமே தேவையில்லை. அசத்யமான விசயங்களில் ஈடுபடுவர்களுக்குத் தான் அச்சம், நமக்கில்லை. பயம் உண்மையானவன் அருகில் கூட வராது.

ஆகையால், தைரியமாக, பயமின்றி சமுதாயத்தில் இறங்கி பணி புரியுங்கள். எல்லோரும் உங்கள் சோதரரே என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள், பிற மதத்தின் மேல் ஏற்படும் வெறுப்பை அடியோடழித்து விடுங்கள். மதங்களின் மேல் வைக்கும் துவேஷமே உலகில் எல்லாக் குழப்பங்களுக்கும் மூல காரணம். எல்லா மதங்களும் நேசிக்கப்பட வேண்டும். வெறுக்கப்படக் கூடாது.

## லோகாஸ் ஸமஸ்தா ஸுகினோ பவந்து

நீங்கள் ஸ்வாமிக்குச் செய்யக் கூடியதெல்லாம் ஒன்றே! உலக நாடுகளிலுள்ள அத்தனை மனிதர்களும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் சுகமாக இருக்க வேண்டும் என்று விரும்புங்கள். 'லோகாஸ் ஸமஸ்தா ஸுகினோ பவந்து' இந்த உலகம் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நிஜமான ஒற்றுமை உணர்வு, ஒற்றுமையை நாம் அடைய முடியும்.

(68ம் அவதார தினப் பேருரையிலிருந்து)

—*—

ஓம் சாயிராம்

# நானிருக்கப் பயமேன்

- பாபா -

நான் பெரிதும் விரும்பும் ஒரு தொழிலிலேயே பெருமதிப்புக் கொண்டுள்ளேன். அது ஏழைகளினது துன்பங்களைத் துடைத்தலும், அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமாகும். நான் பெருமைப்படுவதற்கு ஒரு காரணமிருக்கிறது; ஏனெனில் என்னை வணங்குபவர்களையும், விரும்புபவர்களையும் நான் ஆபத்தினின்றும் காப்பாற்றுகின்றேன்.

நம்முடைய துயரம். கஷ்டம், இடுக்கண் இவைகளுக்கு ஒரே நிவாரணம் சாயியிடம் அடைக்கலம் புகுவதே. சாயி ஒருவரே கஷ்டங்களையும், நோய்களையும் அகற்றி நமக்கு சுகமளித்து அமைதியையும், மேன்மையையும் அளிக்கக் கூடியவர்.

நீங்கள் எவ்வாறு இருந்தாலும் நீங்கள் என்னுடையவர்கள். உங்களைக் கைவிடமாட்டேன். நீங்கள் எங்கிருந்தாலும் நீங்கள் என் அருகில் உள்ளவர்கள்; எனக்கு எட்டாமல் நீங்கள் போகமுடியாது.

சாயி எப்பொழுதும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் உதவி செய்யவும், வழி காட்டவும், பங்கு கொள்ளவும் மன விருப்பமுடன் உள்ளார். இதுவே சாயிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

உங்கள் இதயத்தில் என்னிடம் ஒரு நெருக்கத்தைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அதற்குத் தக்க பலன் கிட்டும். உங்களுக்கு அந்தத் தெய்வீக அன்பு வந்துசேரும். நீங்கள் விடுதலை பெறுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். நீங்கள் காப்பாற்றப்பட்டுள்ளீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அற்புதங்கள் அவதார புருஷனுக்கு இயல்பாக, தானாக வரக் கூடியவை. மகிழ்ச்சியை அளிப்பவன் ராமன், பிறரைக் கவர்பவன் கிருஷ்ணன். எனது செயல் ஒவ்வொன்றும் மகிழ்ச்சி அளிப்பதும் இதயத்தைக் கவர்வதுமே ஆகும். அது உங்கள் மொழியில் அற்புதம் எனப்படுகிறது.

நானிருக்கப் பயமேன்? எல்லா நம்பிக்கைகளையும் என்னில் வையுங்கள். நான் உங்களுக்கு வழிகாட்டிப் பாதுகாப்பேன்.

# ஆக்குவாய், காப்பாய், அருள்தருவாய்...

1995 ஒக்டோபர் 30ம் திகதி இரவு 8 மணி. மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு, கொட்டும் மழையில் ஓடுகிறார்கள்.

தம் வயதான பெற்றோரைக் கையில் பிடித்தபடி சிலர்... கைக்குழந்தைகளை மார்பில் அணைத்தபடி சிலர்... மழை நீரினால் கால்கள் விறைக்க ஓடுகிறார்கள். கார்களிலும்... மினிபஸ்களிலும்... லான்ட் மாஸ்டர்... டிராக்டர்... சைக்கிள்கள்... மாட்டு வண்டிகளிலும் ஓடுகிறார்கள்... பெருவாரியான மக்கள் கால் நடையாகவே போகிறார்கள்.

ஆண்டவனால் கூட அவர்களைத் தடுக்க முடியாது போலிருந்தது. அசையாது உறுதிபடைத்த இதயங்களைக் கூட உலுக்கி எடுத்து இடம் பெயர வைத்தது. இத்தனையையும் அமைதியாக கேற் கம்பியைப் பிடித்தபடி பார்த்துக் கொண்டு இருக்கிறேன், "அக்கா... நீங்கள் என்ன மாதிரி..." இருளில் என் ஒன்றவிட்ட சகோதரியின் குரல் கேட்டு அதிர்ச்சியில் இருந்து விடுபடுகிறேன். "ஐயா சுகமில்லாமல் இருக்கிறார்... அம்மாவுக்கும் இப்படித் திடீர் பயணம் ஒத்து வராது... கூப்பிட்டாலும் வரமாட்டார்கள்.. அவர்களை விட்டு நான் எங்கும் போகமாட்டேன். பகவான் இருக்கிறார் காப்பாற்றுவார்... நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன்... அவள் போய் விட்டாள்...

மக்கள் சக்தி ஒன்று திரண்டு பருத்தித்துறை... சாவகச்சேரி... கிளாலி கிளிநொச்சி வரை பரந்து விரிந்து ஓடியது. "பகவானே! கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் எங்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை ஏன் இந்த மனிதர்களுக்கு வரவில்லை...? பகவானே...! உன்னை மீறி ஒரு ஆபத்து எங்களுக்கு வருமா..? உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டு இருந்தாலே போதுமே. மலை போன்ற எங்கள் பாவங்கள் எல்லாம் பொடியாக்கிக் காப்பாற்றுவாயே..." மனம் அலை பாய்ந்தது. பகவானின் படத்திற்கு முன்னால் இருந்து பிரார்த்திக்கிறேன். நோயுற்று இருக்கும் என் தந்தையைப் பராபரிப்பதில் அடுத்த ஆறு நாட்களும் கடந்து விடுகிறது.

யுத்த பீதி என் தந்தையை அதிர்ச்சியுறச் செய்து 7ம் நாள் படுக்கையாக்கியது. 8ம் நாள் விடிய 5 மணிக்கு என் தந்தையார் மரணம் அடைந்தார். என் தந்தையின் மரணச் செய்தி கேட்டு அங்கொன்று இங்கொன்றாக இருந்த நான்கு... ஐந்து பேர் வீட்டுக்கு வந்தார்கள்.

வந்தவர்களிடம் யாழ்நகரில் யார் யார் எல்லாம் இருக்கிறார்கள் என்று விசாரிக்கிறேன். இருப்பார்கள் என்று நம்பியவர்கள் யாரும் இல்லை என்றதும் அதிர்ச்சிக்குள்ளானேன். "ஓ... பகவானே... பாபா! என்னிடம் பற்றுக் கொண்டவர்களை நான் ஒரு போதும் கைவிட மாட்டேன்" என உறுதிமொழி வழங்கினாயே? எத்தனையோ வியாழக்கிழமைகளில் இந்த உறுதி மொழி சாயி நிலையங்களில் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்பட்டதே...! பகவான் எங்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எந்தஒரு சாயி நிலைய அங்கத்தவர்களுக்குக் கூட வரவில்லையா...? உயிருக்கு உயிரான என் தந்தை இறந்த துயரம் ஒரு புறம், மறு புறம் எங்கள் சாயி அங்கத்தவர்கள் கூட இந்த மக்கள் வெள்ளத்தில் அள்ளுப்பட்டுப் போய்விட்டார்களே. என் கூட்டத்தை விட்டு நான் பிரிந்து விட்டேனே என்ற கவலை அசையாத என் மனம் கூட தளும்பியது. என் தாயாரிடம் ஓடுகிறேன்.

"அம்மா...! இந்தப் பிரதேசத்தில் நாங்கள் மட்டும்தான் இருக்கிறோம்... *Red-Cross* கூடப் போய் விட்டதாம்... எங்களுக்கு ஏதாவது நடந்தாலும் கூட, கேட்க மனிதர் இல்லை... வாங்கோ மனிதரோடு மனிதராகப் போவோம்..." என் தாயார் என்னை முறைத்து ஒரு பார்வை பார்த்தார். "நீயா இப்படிக் கதைக்கிறாய்? எதற்கெடுத்தாலும் என் பாபா எனக்கிருக்கிறார் என்று சொல்வாயே.. அந்த பாபா எங்கே போய் விட்டார்...? .. நீ மனம் குழம்பியிருக்கிறாய்; போய் பகவானைக் கும்பிடு போ... அப்படியல்ல போகத்தான் வேணும் என்றால் நீங்கள்போங்கள். எனக்கு என் அம்பிகை துணையிருப்பாள்." மனம் தளும்பி சோர்ந்து போய் இருந்த என்னை தாயாரின் வார்த்தைகள் விழித்தெழ வைத்தது.

"ஓ.. பகவானே...! எத்தனையோ பீதிகள், துன்பங்கள்...மனக்கசப்புகள் அத்தனையிலும் எனக்கு உறுதுணையாக இருந்து என்னைக் காப்பாற்றிய என் இறைவனே... இந்நேரத்தில் என்னைக் கைவிடப் போகிறாயா...? நிச்சயமாக இல்லை...! என்பாபாவின் அன்பும் அருளும் ஆசியும் எப்போதும் போல எனக்கு இப்போதும் உண்டு." அன்றில் இருந்து என் வழமையான மாலை நேரப் பிரார்த்தனையை தீவிரமாக்குகிறேன், என் சகோதரனின் பிள்ளைகளும் நானுமாக மாலை 7மணிக்கு பிரார்த்தனைக்காக அமர்வோம். பகவானின் 108 நாமங்கள் சொல்லிப் பூப்போடுவோம்... அதைத் தொடர்ந்து பஜனைப் பாடல்களை மாறிமாறிப் பாடுவோம்... பின் சர்வ தர்மமாலை...... காயத்திரி மந்திரம் 3 தடவை அல்லது 9 தடவை... த்வமேவ மாதாச... என்ற ஸ்லோகம், அதன் பின் படைக்கப்பட்ட உணவுக்கான பிரம்மார்ப்பணம் ப்ரம்மஹவிர் மந்திரம்... அஸத்தோமா... இறுதியில் லோகா சமஸ்தா... ஓம் சாந்தி... சாந்தி...சாந்தி... 3 தடவை. பின் சாயி இலக்கியத்தில் ஏதாவது ஒரு புத்தகம் எடுத்துப் படிப்போம். 8-30 வரை தொடரும்.

பொதுவாக ஸ்வாமியிடம் அதைத்தா இதைத்தா என்று கேட்கமாட்டேன். உனக்கு எது இஷ்டமோ அது நடக்கட்டும் என்றுதான் பிரார்த்திப்பேன்.... ஆனால் இம்முறை பிரார்த்தனையில் இரண்டு அம்சக் கோரிக்கையை பாபாவுக்கு முன்னால் வைத்தோம். அதாவது, யுத்தபீதி எல்லாம் ஒழிந்து நாட்டில் அமைதி நிலவவேண்டும்... இரண்டாவது, போனவர்கள் திரும்பி வர வேண்டும்.

அன்று டிசம்பர் 7ம் திகதி. தந்தை இறந்த 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் செய்யும் பொருட்டு வீடு முழுவதும் கழுவுகிறோம். சாதாரண நாட்களாக இருந்தால் உதவிக்கு எத்தனைபேர் வருவார்கள்... இப்படித் தனியாக இருந்து முறியத் தேவையில்லையே... "பகவானே...! என்ன செய்வது... ஸ்வாமி எனக்கு முதுகெல்லாம் நோகிறது.'' இப்படி எனக்குள் புலம்பியபடியே... என் சகோதரனின் சிறுபிள்ளைகள் தண்ணீர் கொண்டு வர அவர்களுடன் சேர்ந்து கழுவுகிறேன்.

எல்லாம் முடிந்து மாலை 2-00 இருக்கும். வழமை போல பகவான் முன்னிலையில் சமைத்த சோறு கறிகளை ஒரு தட்டில் படைக்கிறேன். ப்ரம்மார்ப்பணம்... பாடி பிரார்த்தித்து – பாபாவுக்கு நன்றி கூறி, பிரசாதத்தைச் சாப்பிடுவதற்காக என் தட்டில் போடுகிறேன். பருப்புக் கறியில் கைவைத்ததும் தகடு போன்ற ஏதோ ஒன்று கையில் தட்டுப்படுகிறது. வேலை செய்த களை ஒருபுறம் பசிக்களை மறுபுறம். தகட்டைக் கையில் எடுத்துப் பார்க்கிறேன் அதிசயம்! நம்பமுடியவில்லை. அப்படியே முன்னால் இருந்த அண்ணியிடம் கொடுக்கிறேன். தண்டுடன் கூடிய துளசி இலையில் பாபா இருப்பது போன்ற 'பென்ரன்' அது. அதில் காவற் தகடுபோல கோடுகளும் நட்சத்திரங்களும் உள்ளது.

பிள்ளைகள் ஒருவர் மாறி ஒருவர் பரபரப்பாகப் பாாத்து அதிசயித்து ஆரவாரிக்கின்றனர். ''ஆ... பாபா... எங்கள் வீட்

டுக்கு வந்திருக்கிறார். இனி எங்களுக்குப் பயம் இல்லை... பாபா எங்களைக் காப்பாற்றுவார். பாபா எங்களைக் காப்பாற்றுவார்." பயத்தினால் வாடியிருந்த சிறுவர்கள் சந்தோஷத்தால் சத்தமிட்டார்கள். உண்மைதான்...''நான் இருக்கப் பயம் ஏன் கவலைதான் ஏன்''... என பகவான் கேட்பது போல இந்த அடையாள முத்திரையை பென்ரன் வடிவில் தந்தார் பாபா. அதைப் பூஜை அறையில் வைத்து வணங்குகிறோம்.

இந்த 6 மாதகாலமும் பகவானின் அன்பையும் அருளையும் முழுமையாக நாளாந்தம் உணர்ந்தோம். ''இன்று சமையலுக்கு ஒரு மரக்கறிகளும் இல்லை என்ன செய்யலாம்...? வாருங்கள் எங்கள் வயல் பக்கம் போய்ப் பார்ப்போம்"

குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போகிறேன். அதிசயம்... வயல் வரம்பு பெரும்பாலான பகுதிகளில் எல்லாம் யாரோ வல்லாரை விதைகளை விதைத்து விட்டது போல எங்கும் படர்ந்து விரிந்து கிடந்தது. இவை மட்டுமல்ல, பசளிக் கீரை வகைகள் மொசுமொசுக்கை, தூதுவளை போன்ற இலைவகை உணவு எமக்கு வேண்டிய அளவுகிடைத்தது. தக்காளி, பூசணி மரங்கள் கூட தான்தோன்றியாக முளைத்து எமக்கு அவ்வப்போது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தன. இவை எல்லாம் சிறுவர்களுக்கு பெரிய அதிசயம். ''பார்த்தீர்களா! பகவான் எங்களுக்காக வல்லாரை விதைகளை விதைத்திருக்கிறார்... தக்காளி, பூசணி எல்லாம் தருகிறார்..." சந்தோஷமாகச் சொல்லியபடி பிடுங்குவார்கள்.

கடைகள் இல்லை, அங்கொன்று, இங்கொன்றுமாக சில குடும்பங்கள் தான் இருந்தன. ஒருவருக்கு ஒருவர் வேற்றுமை இல்லாது ஒற்றுமையாக தங்கள் வீட்டுப் பொருட்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். பண்ட மாற்றம் அன்புப் பரிமாற்றமாக பரிணமித்து, எங்கும் சாயியின் அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

வழமைக்கு மாறாக மாதம் 2 அல்லது 3 தடவை மழை பெய்யும். பங்குனி சித்திரை மாதக் கடும் வெப்பம் இம்முறை இல்லை. சித்திரை வருஷப்பிறப்பை அடுத்துக் கொட்டிய மழையைப் பார்த்து, சித்திரை வெள்ளம் போடப் போகிறதோ என நினைத்தோம்.

அப்படியல்ல, கொடூரமான சித்திரை வெப்பத்தால் நாம் சுருண்டு போகாதபடி, பகவானால் இதமான காலநிலையை உருவாக்கும் பொருட்டு கொட்டப்பட்ட மழை அது. மாடுகள், ஆடுகள் எல்லாம் தங்கள் வீட்டு எஜமானர்களால் கைவிடப்பட்ட நிலையில் அலைகின்றன. அவைகளின் புல், பூண்டு உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் கொட்டப்பட்ட மழை அது. மனிதர்களின் தேவைகளை மட்டுமின்றி மிருகங்களின் தேவைகளையும் பாபா நிறைவேற்றி வைக்கிறார். இடையிடையே எங்கள் மானிப்பாய் சாயி நிலையத்திற்கும் சென்று கூட்டித் துப்பரவு செய்து விளக்கேற்றி வணங்குவோம். வணங்கும் போது "பாபா...! மறுபடியும் மக்கள் திரும்பிவந்து யாழ்நகரில் உள்ள சாயி நிலையங்களில் பஜனைகள், பாலவிகாஸ் கல்விவட்டம் என்று எல்லாம் நடைபெற அருள்வாய்..."

எம்பிரார்த்தனை வீண்போகவில்லை. 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடங்கி, மக்கள் எப்படிப் பயந்து ஓடினார்களோ அதைவிட வேகமாக தங்கள் வீட்டுப் படிகளில் நிம்மதியாகச் சரிந்து படுத்தால் போதும் என்ற ஆவலுடன் வந்து விட்டார்கள். பஜனைகள், கல்விவட்டம் எல்லாம் நடைபெறுகின்றன. ''மிருகங்கள் பறவைகள் எல்லாவற்றுக்கும் உணவும் நீரும் தந்து பாதுகாக்கும் நான் உனக்கு உணவளித்துப் பாதுகாக்க மாட்டேனா...?'' என்ற பகவானின் அருள் வாக்குக்கு அமைய இந்தக் கஸ்ட காலத்தில் எம் பயம் நீக்கி, உணவும் அளித்த இறைவனின் அன்பையும் அருளையும் எழுதிட முடியாது.

— செல்வி K. உஷா

# எங்கிருந்தோ வந்தான்... நண்பனாய்... சேவகனாய்

1995 அக்டோபர் 30ந் திகதி திங்கள் மாலை நேரம் சுமார் 5 மணி. மிகவும் பயங்கரமான ஒரு மாலைப் பொழுது. ''உங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டு இரவு 12 மணிக்குள் நாவற்குழியைக் கடந்து உங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.'' என்று ஒரு அறிவிப்பு. இதைக் கேட்டு தலைசுற்றி மயக்க நிலையை அடையாத யாழ்ப்பாண, வலிகாம மக்கள் எவரும் இருக்க முடியாது. எனது நிலையோ மிக மோசம்.

நானோ மூன்றாவது காலின் உதவியுடன்தான் நடப்பவன். என்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூட எனது மனைவியின் உதவி தேவை. கைப்பிடி இல்லாமற் கடைத் தெருவிற்கே போக முடியாதவன், கைதடியைத் தாண்டுவது எப்படி? அதுவும் ஆறு மணித்தியால அவகாசத்தில். பகவானின் நாமத்துடனும் பக்கத்து வீட்டு யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் ஐயாவின் உதவியுடனும் 11 தினங்கள் கழிந்து விட்டன. இனியும் இருக்க முடியாத நிலை. எறிகணை வீச்சுக்கள் காதைப் பிளக்கின்றன. எனது இல்லம் நல்லூர் சாயி பஜனை நிலையத்திற்கு அருகாமையில் இருக்கிறது. இந் நிலையில் பஜனை மண்டபத்தில்தான் எனது பொழுது கழிகிறது.

எனது மனைவி, என்னைப் பாதுகாப்பாகக் கொண்டு போய் பராமரிக்கக் கூடிய இடம் முல்லைத்தீவில்தான் உண்டு. எனவே அங்கு போய் நிலைமைகளைப் பார்வையிட்டு ஆன ஏற்பாடுகளையும் செய்து விட்டு, ஆயத்தங்களுடன் வந்து என்னை அழைத்துக் செல்வதாகக் கூறி, எனக்கு நான் கைந்து நாட்களுக்குரிய, உணவு, நீர் மற்றும் தேவையான பொருட்களை எடுத்து வைத்து விட்டுச் சென்றுவிட்டார். ஆணையாளரும் சென்று விட்ட நிலையில் ''சாயிராம்'' நாமமும் நானும் தான் தனிமையில் விடப்பட்டோம். நவம்பர் 11ம் திகதியுடன் வலிகாமம் பகுதி ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப் பட்டது. நல்லைக் கந்தன் மணியும் ஓய்ந்தது. ஆனால் ஓயாமல் இருந்த மனம் சாயி நாமத்தில் தோய்ந்தது. நவம்பர் 16ம் திகதி காலை வயிறும் காய்ந்தது. எனது உடல் சாயியின் பாதத்தில் வீழ்ந்தது. ஒருவாரமாகச் சரியான உணவின்மையால் உடல் களைத்திருந்தது. வயோதிபத்தின் வாட்டம் வேறு. நல்லூர் மண்டலியின் சாயி முருகனுக்கு விளக்கேற்றினேன். அழுதேன், தொழுதேன், "ஸ்வாமி, எனது மனைவி தினசரி உனக்கு உணவு நிவேதனம் பண்ணாமல் உண்பதில்லையே! இன்று முதல் எனக்கு உண்பதற்கோ, குடிப்பதற்கோ எதுவுமே இல்லையே! இந்த நிலையிலும் என்னைப் பார்த்தபடி இந்த புன்னகைதானா? ஆபத்பாந்தவா, அனாத ரட்ஷகா, தீனபந்தோ சாயீசா சரணம், சரணம் சாயீசா! இனி உன் விருப்பம் இதுவே என் விண்ணப்பம்".

நல்லூர் மண்டலியிலிருந்து வீட்டிற்கு வந்து எனது அறைவாசலில் இருந்தபடி வெளிப்பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். எங்கும் நிசப்தம். சூனியம். காலை 10 மணி நல்லூர்க் கந்தன் மணியொலித்திருக்க வேண்டிய நேரம். வெள்ளை வேஷ்டி, வெள்ளை அரைக்கை சேட், பரந்த பிரகாசமான முகம், ஒருவர்! சுமார் 5' 3" உயரம். என்னிடம் வந்தார். எனக்கோ பேராச்சரியம். சனநடமாட்டமே இல்லா நேரத்தில் இந்த மூலைமுடுக்கில் இருந்த வீட்டிற்கு எப்படி நானொருவன் இருப்பது தெரிந்து வந்தார்! வந்தவர் தானாகவே சம்பாஷணையைத் தொடக்கினார்.

'என்ன? நீங்கள் ஒரு இடமும் போகவில்லையா...' 'இல்லை இந்த சாயி இல்லத்தின் பொறுப்பு இருக்கிறதே! அதுதான் போக விரும்பவில்லை. எதற்கும் ஸ்வாமி

துணை தானே.' என்றேன் 'அப்படியா நல்லது. உங்கள் உணவு நிலை எப்படி?'. 'எங்கேயாவது அரிசி கிடைக்கமுடியுமானால் கொண்டுவந்து தாருங்கள் காசு தருகிறேன்'. 'சரி கொண்டு வந்து தருகிறேன்'. சரியாக 5 நிமிடங்களில் அதே ஆள், கையில் உரப்பை. அதற்குள் சாமான்கள். அட ஐந்து நிமிடத்தில் எப்படி..? வந்தவர் அப்படியே உரப்பையை என்னிடம் தந்தார், 'உட்காருங்கள். உங்கள் பேர், ஊர்' என்று விசாரித்தேன். தேநீர் அருந்துங்கள் என்று கூட என்னால் கேட்க முடியாத நிலை. காரணம் தேயிலை, சீனி கூட வீட்டில் இல்லை. 'இப்படி உதவி செய்வதே எனது வேலை' இது அவர் பதில். 'சற்று நேரம் இருந்து விட்டுச் செல்லுங்களேன் இவற்றிற்குக் காசு?' 'வேண்டியதில்லை நிறையப் பேர் உதவி கேட்டிருக்கிறார்கள், நேரமில்லை போய்வருகிறேன்'. 'மீண்டும் எப்போது இங்காலைப்பக்கம் வருவீர்கள்?' 'உங்களுக்கு உதவி தேவைப்படும் போது வருவேன்'. சொல்லியவண்ணம் அவர் நகர்ந்தார், நடந்தார். திடீரென ஒரு உந்துதல், எழுந்து சென்று வராந்தாவில் நின்று அவரைப் பார்த்தேன். எனது வீட்டிலிருந்து நல்லூர் மண்டலி 30 யார் தூரமளவில் தான். அதுவரையில் போனவர்தான் அப்புறம் மறைந்தேவிட்டார்.

உடனே போய் அவர்தந்த உரப்பையை அவிழ்த்துப் பார்த்தேன். தனித்தனி உறைகளில், அரிசி, துவரம் பருப்பு, ரவை, சீனி, தேயிலை. 'சாயிராம், சாயிராம்' என் நா குளறியது. கேட்டது அரிசி மட்டுமே கிடைத்ததோ எல்லாம்! நவம்பர் 21ம் திகதி சில இளைஞர்கள் வந்தனர். 'ஏன் ஐயா நீங்கள் போகவில்லை. ஏறுங்கள்! ஆபத்து வருகிறது உங்களை சாவகச்சேரியில் கொண்டு போய் விடுகிறோம்' வற்புறுத்தினர், 'என்னால் முடியாது சாயிமண்டலிப் பொறுப்புள்ளது. வயதானவன் எனவே உயிருக்குப் பயமில்லை என்றேன்' உறுதியுடன். வந்தவர்கள் எவ்வளவோ கேட்டும் முடியவில்லை. குண்டு மாரி பொழிந்தது. என்மனம் உறுதிகுலையாமல் சாயிநாமம் பொழிந்தது. சாயி பாதம் பணிந்தது. நான்தான் சாயியின் பிரசாதம் பஞ்சாமிர்தமாக உண்பவனாயிற்றே. 28ம் திகதி மாலை வழக்கம்போல் விடிந்தது. வாசலில் உட்கார்ந்தபடி சாயி நாமத்துடன் இருந்தேன். பின்பக்கத்தால் வேலியைப் பிரித்தவண்ணம் ராணுவத்தினர் வந்தனர். என்னைக் கண்டதும் '*Good-Morning*' என்றனர். பதிலுக்கு நானும் சொன்னேன். எப்படித் தனியே இருக்கிறீர்கள் என்று கேட்டு, வாருங்கள் அச்சுவேலியில் அகதி முகாமில் சிலநாட்கள் இருந்துவிட்டு வரலாம் என்றார்கள். மறுத்தேவிட்டு, சாயிஇல்லப் பொறுப்பு இருக்கிறது என்று புரியவைத்தேன்.

அதிகாரித் தரத்திலான ஒருவர் 'சரி சாயி காட்டுங்கள்' என்றார். உடனே சாயி இல்லத்தினைத் திறந்து காட்டினேன். அவ்வதிகாரி ஸ்வாமியை வணங்கிவிட்டு 'நான் ஒரு கிறிஸ்தவன் ஆனாலும் ஸ்வாமியுடன் இருப்பவன்' என்று தனது சட்டைப் பையிலிருந்து பாபாவின் பொக்கற் படமொன்றை எடுத்துக்காட்டினார். அப்படம் எனக்கும் அபயகரம் காட்டியது. 'ஸ்வாமிக்கு விளக்குக் கொளுத்துங்கள்' என்று தனது ஆட்களின் மூலம் தேங்காயெண்ணையும் எடுப்பித்துத் தந்தார். அன்றிலிருந்து எனக்கு உணவுப் பொருட்களும் அனுப்பி வைத்தார். எனவே ஸ்வாமியின் கருணை மழையால் எனக்கு உணவுப் பஞ்சமே ஏற்படவில்லை. சாயி இல்லத்திற்கும், எனது வீட்டிற்கும் எந்தவித சேதமோ, களவோ இடம்பெறவுமில்லை.

ஆம் என் மனைவி அதிகாலை ப்ரம்ம முகூர்த்தத்தில் எழுந்து தினசரி ஓங்காரம், ஸுப்ரபாதம், அஷ்டோத்திரம், காயத்திரி, சாயிகாயத்திரி மந்திரங்கள் சொல்லி பாத மலரில் இட்ட பூக்களே சாயீசன் எனக்குப் பொழிந்த கருணை மழை.

ஓம் ஸ்ரீ அன்ன வஸ்திரதாய நமஹ,

**— க. சர்வானந்தம்**

நல்லூர் ஸ்ரீ சத்யசாயி பஜனை நிலையம்

# சேவைக்கு சுவாமியின் தூண்டுதல்

சொந்த நலன்களை ஒதுக்கி வையுங்கள். சமுக நலனே உங்களது முக்கிய அக்கறையாக இருக்க வேண்டும். - பாபா

யாழ்ப்பாண மக்கள் எல்லோரும் நவம்பர் 1995 முதல் ஏப்பிரல் 1996 வரை இடம் பெயர்ந்து சாவகச்சேரி, பருத்தித் துறை, வன்னிப் பிரதேசத்திலும் இன்னும் வெவ்வேறு இடங்களிலும் வசித்து வந்தது உலகறிந்த விடயம். இராணுவ நடவடிக் கைக்குப் பயந்து, மிகக் குறுகிய கால அவ காசத்துள் கைக்கு அகப்பட்டதை எடுத்துக் கொண்டு, உயிரைக் காப்பாற்றினால் போதும் என்று ஓடி, சொல்லொண்ணா வேதனையில் வாழ்ந்தது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாகும்.

நான் எனது குடும்பத்தினருடனும், எனது சகோதரர்களுடனும் இடப்பெயர்ந்து உடுப்பிட்டி என்னுமிடத்தில் வசித்துவந் தோம் இந்த இடம் இராணுவத்தின் எறி கணை வீச்சுக்கு அடிக்கடி இலக்காவதால் சுவாமியின் நாமத்தை அடிக்கடி சொல்லும் வாய்ப்பைத் தந்தது. மக்கள் படும் வேதனை களையும், பசிக்கொடுமையையும், அவல நிலையையும் எண்ணி எனது மனம் அமைதி இல்லாமல் வேதனைப்பட்டுக் கொண்டு இருந்தது. இந்த நிலையில் கஷ்டப்படும் மக்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடி யாதா என்ற ஏக்கம் ஒருபுறம், புதிய இடம் எல்லோரும் கஷ்ட நிலையில் வாழ்கிறார்கள் உணவுப் பொருட்களோ, மரக்கறிவகை களோ, அரிசி வகைகளோ வாங்க முடி யாத நிலை. அத்துடன் ஆன்மீக நாட்ட முடையோர் அங்கும் இங்குமாகப் பிரிந்து வாழும் நிலை. இந்நிலையில் எப்படி உதவலாம்? என்ற சிந்தனையில் மன நிம் மதியற்று, பல நாட்களாக வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

எனது வீட்டிற்கு அருகாமையில் வசிக் கும் திருமதி நாவுக்கரசி என்பவர் ஒரு நல்ல சாயி பக்தர், அவர் ஒருநாள் அதிகாலை யிலே திடீரென பதட்டத்துடன் என்னிடம் ஓடிவந்தார். 'அதிகாலையிலே ஒரு கனவு கண்டேன். எனக்குப் பயமாகவும், ஆச்சரிய மாகவும் இருந்தது. அதுதான் ஓடி வந் தேன்' என்று பீடிகை போட்டார். 'என்ன கனவு' என்று நான் கேட்டேன். 'சுவாமி கனவில் வந்து தனக்குப் பிச்சை போடும் படி கேட்டார். அவரது கையில் பிச்சைப் பாத்திரம் இருந்தது. நான் அவருக்குச் சாதம் போட்டுவிட்டு, நான் பஜனைக்கு வரும் உங்கள் வீட்டையும் காட்டினேன். எனக்கு இதன் அர்த்தம் புரியவில்லை' என்றார். எனக்கு அதன் அர்த்தம் புரிந்து விட்டது.

---

சுவாமியின் கையில்

பிச்சைப் பாத்திரம்.

அவருக்கு சாதம் போட்டேன்.

---

எனது மனவேதனைக்கு மருந்தாகச் சுவாமி சேவைப்பணிகளைச் சைகை காட்டி யுள்ளார் எனப்புரிந்து கொண்டு, எனது சிந்தனைகளை அவருக்குக் கூறினேன், அதனை ஏற்றுக் கொண்ட அவர் உடனடி யாகத் தனது வீட்டிற்கு ஓடிச் சென்று,

ரூபா 1000 எடுத்துக் கொண்டுவந்து தந்தார். 'உடனே ஆரம்பியுங்கள். இப்போது இதுதான் உண்டு, பிறகு மேலும் உதவி செய்கிறேன்' என்று கூறினார். சுவாமியின் அனுமதி கிடைத்ததையும் அவரின் தூண்டுதலையும் மனத்திலெண்ணி மிகுந்த ஆனந்தத்துடன், சேவைப்பணியை ஆரம்பித்தேன். சில முகாம்களின் கர்ப்பிணித்தாய்களுக்குப் பால்மாவும், குழந்தைகள், வயோதிபர்களுக்குச் சத்துணவும் வழங்க சுவாமியின் திருவருள் கைகூடியது.

அந்த சூழ்நிலையில் 10 நாளில் ரூபா 20,000/- க்கு மேல் சேர்ந்தது. சுவாமியின் அற்புதமே! நாங்கள் செய்த உதவி கடல் நீரில் புளி கரைத்த கதையாகத்தான் இருக்கும். பிரச்சினையோ மலையளவு. எங்கள் உதவி தேக்கரண்டியளவு. முழுப்பிரச்சினையையும் தீர்க்க எம்மால் முடியாது, ஆனால், எந்த இடத்திலோ எந்த நாட்டிலோ எங்கே இருந்தாலும் அங்குள்ள சேவைப்பணிகளில் பங்கு பற்றுங்கள்' என்ற பாபாவின் கட்டளைக்கு ஏற்ப எங்களால் முடிந்த உதவி செய்து எமக்குள் ஒரு மனச்சாந்தியைத் தேடிக் கொண்டோம். இராமர் அணைகட்ட மண் எடுத்த அணில் போல எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்த எமது சற்குருவை என்றும் போற்றுகிறோம்.

— S. ஈஸ்வரலிங்கம்
யாழ் சத்ய சாயி நிலையசேவை இணைப்பாளர்

---

## 1996 சத்ய ஆண்டு

மனிதன் 21ம் நூற்றாண்டில் காலடியெடுத்து வைக்க இருக்கிறான். ஐந்து அடிப்படை விழுமியங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை ஆகியவற்றைத் தத்தமது அனுபவங்களாலும், ஆழவேருன்றிய சாதனைகளாலும் முழுமையான சாதனமாக்கிக் கொண்டு, 21ம் நூற்றாண்டில் பிரவேசிக்க வேண்டும். அதற்கான வழிகாட்டலை அளிப்பதற்கு பூரண அவதாரமான பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஒருவரால்தான் முடியும்.

சாதி, மத, நிற கொள்கை வேறுபாடுகளைக் கைவிட்டு, உலகத்தில் ஒரே ஒரு மதம் தான் உண்டு, அது அன்பென்னும் மதம்; ஒரே ஒரு மொழிதான் உண்டு, அது இருதயத்தின் மொழி; ஒரே ஒரு இறைவன் தான் இருக்கிறார், அவர் எங்கும் நிறைந்தவர் என்ற ஒரே நம்பிக்கையுடன் புதிய யுகத்தில் காலடி எடுத்து வைக்க வேண்டும்.

எனவே புதிய நூற்றாண்டின் உதயத்தோடு இணைந்துவர இருக்கும் பகவானின் 75வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாக 1996 - 2000 வரையான ஆண்டுகளை மனித விழுமிய ஆண்டுகளாகக் கொண்டாட உலக சத்ய சாயி நிறுவனம் ஆயத்தம் செய்து வருகிறது.

இதன் படி 1996 - சத்யம், 1997 - தர்மம், 1998 - சாந்தி, 1999 - பிரேமை, 2000- அஹிம்சை என அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

உலகெங்கும் உள்ள சாயி பக்தர்கள் அடுத்த ஐந்து வருடங்களையும், இவ் விழுமியங்கள் ஒவ்வொன்றையும் புரிந்து கொள்வதற்கும், பயிற்சிகள் மூலம் அனுபவத்தில் கொண்டு வருதவற்கும் முழுமுயற்சி எடுக்க வேண்டும். இதன் மூலம் இன்றைய தலைமுறையினரும், இளைய தலைமுறையினரும் பகவான் பாபாவின் அன்பையும், போதனைகளையும் உள் அடக்கிய உதாரண புருஷர்களாக 21ம் நூற்றாண்டுக்குள் நுழையும் தெய்வீகச் சிறப்புரிமை பெறுவார்கள்.

குரு பூர்ணிமா,
பிரசாந்தி நிலையம்.

— ஸ்ரீ இந்துலால் ஷா
உலக சத்யசாயி நிறுவனத் தலைவர்

# ஒரு புதிய ஆரம்பம்

*[1995 தை மாதத்தில், நடந்த கோபே பூமி நடுக்கம் யப்பானிய மக்களின் மிகவும் கஷ்டமான ஒரு அனுபவமாக இருந்தது. இந்தத் துக்ககரமான சம்பவத்தில் சாயி பக்தர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை "கான் - சாயி லைற்" என்னும் யப்பானிய சத்திய சாயி நிலையத்தின் சஞ்சிகையில் மார்ச் மாத இதழில் அதன் ஆசிரியர் எழுதினார்.]*

சூரியனுதிக்கும் அந்தத் தேசத்தில் அன்று 1995ம் ஆண்டு சனவரி மாதம் 17ந் திகதி, நேரம் 5.46 ஆக இருந்தது. பொது மக்கள் வழக்கம் போல தங்களுடைய அன்றாட வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது பூமியின் அடியிலிருந்து ஒரு முறுகல் சத்தம் கேட்டது. அதைத தொடர்ந்து 7·2 ரிச்ட்டர் அளவில் ஒரு பெரிய நடுக்கம். 'சாயிராம் சுவாமி பா ..பா எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று நான் என்பாட்டில் அழுவதைத்தான் என்னால் கேட்க முடிந்தது. என்னுடன் சேர்ந்து இந்த 40 நொடியில் எல்லாக் குரல்களும் ஒருமித்து 'ஓம்' என்று உச்சரிப்பது போன்று சப்தமிட்டன. ஒரு நிமிடத்தில் எங்களின் உயிர்கள் தலைகீழாக மாறின. வீடுகள் எரிந்தன. சின்னா பின்னமடைந்த சடலங்கள் கோபே நகரத்திலும் அவாஜிதீவிலுள்ள கற்களுக்குள்ளும் சிதைவுகளுக்குள்ளும் சிதறிக் கிடந்தன. இந்தப் பெரிய ஹன்சின் பூகம்பம் தன்னுடைய சின்னத்தைப் பதித்து விட்டது.

ஒரு பெரிய மரப்பெட்டி எங்களுக்கு மேலே விழுந்திருந்தபடியால் நானும் என் கணவனும் எங்களுடைய அறையிலேயே அசையமுடியாது மாட்டுப்பட்டுக் கொண்டோம். இதை நினைக்கும் பொழுதெல்லாம் இப்போதும் என் மூச்சு திணறுகிறது. உடுப்புகளும் மற்றைய சாமான்களும் எங்களின் மேல் வந்து பொறுத்துக் கொண்டன. அந்தப்பாரமுள்ள மரப்பெட்டியின் கதவுகள் எங்கள் மூச்சைத் திணற வைத்தன. எங்களில் ஒருவர் இந்த அமுக்கத்திலிருந்து விடுபடும் வரையும் இந்த நிலையில் தாளிருந்தோம்.

இங்கேதான் இனி ஒரு அற்புதம் நிகழவிருக்கிறது. எங்களின் 7½ மாத பெண் குழந்தை பயத்தினால் நடு நடுங்கி அவள் அறையிலே தன்னந்தனிய இருந்தாள். எங்களுக்கு அவளின் சப்தம் கேட்டது. ஆனால் அந்நேரம் நாங்கள் உதவி செய்ய முடியாது அறைக்குள் மாட்டுப்பட்டிருந்தோம். குழந்தைக்கு ஒரு புது வாழ்க்கையும் ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டிருந்தது. அலமாரியிலிருந்த கண்ணாடிகள் எல்லாம் தூள் தூளாக நொருங்கி இருந்தன. தொலைக் காட்சிப்பெட்டி, வீடியோ டெக் சாப்பாட்டு மேசை, கதிரைகள் எல்லாம் இருக்குமிடத்திலிருந்து அங்குமிங்குமாக சிதறிக் கிடந்தன. இப்படி இருந்தும் சுவாமி அவளைப் பாதுகாத்தார். அவளும் இந்த அனுபவத்திலிருந்து ஒருவித பாதிப்பில்லாமல் தப்பித்தாள். இது தற்செயலாக நடந்த ஒன்றல்ல, ஏனென்றால் ஒரு சிறிய வட்டவடிவமான இடத்தில் அந்தக் குழந்தை ஒரு குடையின் கீழ் இருப்பது போல உள்ள ஒரு இடத்தைத் தவிர ஏனைய இடமெங்கும் கண்ணாடித் துண்டுகள் சிதறிக்கிடந்தன. இது சாயியின் தெய்வீகப் பிரேமையான குடை என்றே நான் நம்புகின்றேன்.

நாங்கள் வெளியேவந்து பத்து மாடிகள் இறங்கிக் கீழே ஓடிவந்தோம். ஒன்றரை வருடங்கட்கு முன்புதான் கட்டப்பட்ட இந்தக் கட்டிடம் தூக்கி வீசப்பட்டதை கீழே இருந்து பார்க்கும் போது எங்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நாங்களிருந்த இடத்தைச் சுற்றிலுமுள்ள சிறிய வீடுகள் இடிந்து விழுந்திருந்தன. எல்லா இடங்களும் புகை மண்டலமும் புழுதியுமாகக் காட்சியளித்தன

பயத்தினாலும் பீதியினாலும் சனங்கள் தெருக்களில் நின்று கொண்டிருந்தார்கள். பூகம்பம் நடந்த நேரத்தில் மின்சாரம், தண்ணீர், வாயு எல்லாம் உடனே செயற் படாமல் இருந்தன. காலை நேரமாக இருந்தபடியால் இதிலிருந்து தப்பியவர்கள் தங்களின் மெல்லிய இரவு உடையுடனேயே காணப்பட்டார்கள். தெருவிலிருந்த குளிரை இது தாக்குப் பிடிக்காது, எதிர் பாராத அதிர்ச்சியினால் பீதியடைந்திருந்த குழந்தைகளையும், வயது முதிர்ந்தவர் களையும் அது முக்கியமாகப் பாதித்தது. இந்தப் பெரிய ஹாசின் பூகம்பம் கான்-சாயி பிரதேசத்தை முன்பு எப்பொழுதா வது இப்படித் தாக்கியதில்லை. ஆகை யினாலே தப்பியிருக்கும் அகதிகள் இந்த அனர்த்தத்தின் விளைவுகளை ஏற்றுக் கொண்டு கஷ்டமான நிலையிலேயே இன்ன மும் வாழ்கிறார்கள்.

பாபா எங்களெல்லோருக்கும் ஒரு செய் தியை அனுப்பினார். 'துன்பப்படாதே. பக்தர் ஒருவருக்காவது கெடுதி வரமாட் டாது'. உண்மையாக ஒருவருக்காவது உடற்பாதிப்பு ஏற்படவில்லை. எங்களு டைய வீடுகள் அழிக்கப்பட்டன, உடமை கள் நாசப்படுத்தப்பட்டன. ஆனால் எங்க ளுடைய உயிர்கட்கு ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் நன்றி கூற எங்கள் பிரபு இருக் கின்றார். கோபே நகரம் தன்னுடைய வழ மைக்குத்திரும்ப அதிககாலம் இருக்கின்றது. இப்பொழுது சில இடங்களில் தண்ணீர், மின்சார வினியோகம் நடைபெறுகின்றது. சமையலுக்கு வாயுவும் குளிப்பதற்கு வெந் நீரும் கிடைப்பதில்லை. கான்சாயியின் காரியாலயமும் தப்பியது. கணனி, ஆய்வு வேலைகட்குத் தேவையான ஆவணங்கள், பூகம்பம் நடந்த முதல் நான் பூர்த்தி செய் யப்பட்ட பெப்ரவரி மாத சஞ்சிகை ஆகிய வைகள் எல்லாம் அப்படியே இருந்தன. பாபா இந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய தன் தெய்வீக ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். வாசக நேயர்களே! இந்த அனர்த்தத்தில் உயிரிழந்த எல்லோ ருக்குமாக இறைவனை வேண்டுங்கள். பூமாதா தன் வழியில் நடத்தியிருக்கிறாள். நாங்கள் இயற்கையை துஷ்பிரயோகம் செய்யாமல் அதனுடன் சேர்ந்து வாழப் பழகுவோமாக.

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தை யும் சரியான வழியில் வாழ்வது எவ்வளவு முக்கியமானது என்பதை, இது போன்ற அனுபவங்கள் எமக்கு உணர்த்துகின்றன. 'கடந்த காலம் முடிந்து விட்டது எதிர் காலம் நிச்சயமற்றது. நிகழ் காலத்தில் வாழுங்கள். நேரத்தை வீணாக்குவது வாழ்க்கையையே வீணாக்குவதாகும்' என்று பாபா சொல்கிறார். இந்த வார்த்தைகள் முன்னொரு போதும் இவ்வளவு அர்த்த புஷ்டியாக உணரப்படவில்லை. ஒரு முழுமையான நிகழ்காலத்தை வீணாக்கிக் கொண்டு, நாளை நடக்க இருப்பதில் எவ் வளவு சுலபமாகத் தங்கியிருக்கிறோம்?

இந்தப் பூகம்பம் அவரது சக்தியினதும் பெருமகிமையினதும் ஞாபகச் சின்னமாக இருக்கட்டும். தெய்வீகப் பாதையைக் காண்பதற்கான சந்தர்ப்பமாக அவர் கொடுத்துள்ள இந்தப் புதிய வாய்ப்பினை யையும், புதிய வாழ்க்கையையும் உணர்ந்து கொண்டு, இந்தப் புதிய பிறப்பை முழுமை யாகப் பயன் படுத்திக் கொள்வோமாக.

ஜெய் சாயிராம்

தமிழில்:

**ஸ்ரீ வல்லிபுரம்**

* * * * * * * * * * * * * * * * * * * *

உடல் என்பது நீர்க்குமிழி போன்றது
மனம் என்பது மடக் குரங்கு போன்றது
உடலினதும் மனத்தினதும் வழியே செல்லாதீர்கள்,

— பாபா

# ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்

போரின் மிக உக்கிரமான நேரம்! எவருக்கும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உயிராபத்து ஏற்படலாம் என்ற நிலை. 'எனது பக்தர்களை நான் ஒருபோதும் கைவிட மாட்டேன்' என பாபா பல தடவைகள் உறுதியளித்திருந்த போதும் சாயி நிலைய அங்கத்தவர் மனங்களும் தளும்பின எனது மனமும்தான்.

திடீரென சுவாமியிடம் செல்லும் வாய்ப்புக் கிட்டியது! நானும் மனைவியுமாக அறையினுள் நுழையும் போது எமக்கு முதுகுப்புறம் காட்டி நின்ற சுவாமி, எங்கள் வரவை உணர்ந்ததும் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டு எம்மைக் கனிவுடன் பார்க்கிறார். பாராமுகமாயிருந்தவர் எம்மை பாற்கடலில் ஆழ்த்துவதற்கு கட்டியமோ! முதலில் எனது மனைவிக்குப் பாத நமஸ்காரம் கிடைக்கிறது. 'எவ்வளவு மெதுமையான பாதங்கள்' என்று கூறியபடி ஆனந்தத்துடன் நீண்ட பாத நமஸ்காரம் பெறுகிறாள். அடுத்து எனக்கும் அந்த வாய்ப்புக் கிட்டியது.

ஆசைதீர அந்தக் கமலத் திருவடிகளைப் பிடித்து தலை சாய்த்து வணங்குகிறேன். அப்பொழுது.....

'எத்தனை பேர் யாழ்ப்பாணத்திலிருந்து பிறந்தநாள் விழாவிற்கு வந்திருக்கிறீர்கள்' என்று சுவாமி கேட்டார்.

'சிவஞானம் ஐயாவும் நாங்களும் தான் என்றேன் நான். உரையாடல் ஆங்கிலத்திலேயே நடைபெறுகிறது.

'அங்கத்தைய நிலமை எப்படி இருக்கிறது' ஸ்வாமி.

சுவாமி நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்! இதைப் பயன்படுத்தி எமது மக்களின் அவல நிலையைச் சுவாமிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

'மிகமோசம் சுவாமி; குண்டு வீச்சுக்களாலும் ஷெல்லடிகளாலும் பலர் கொல்லப்படுகிறார்கள். நேற்றுக் கூட உடுப்பிட்டியில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்...' என்று தொடர்ந்த எனக்கு எனது மடைத்தனம் புரிந்தது 'எல்லாம் அறிந்த சுவாமியை ஒன்றும் அறியாதவர் என்று கருதியது போல் இவற்றையெல்லாம் கூறுகிறேனே. எனது அசட்டுத் தனத்தை நினைக்க எனக்கு அழுகை வந்து விடுகிறது. விசும்பி விசும்பி அழுகிறேன்.

'பயப்படாதே! எந்த ஆபத்தும் எனது அடியார்களுக்கு வந்துவிடாது' என்று கூறுமாற்போல் சுவாமி என்னை அன்புகனிய ஆதரவுடன் பார்க்கிறார். அதை ஆமோதிக்குமாற் போல் எங்கிருந்தோ ட்ரிங்... டிரிங்... டிரிங்... என மங்களகரமாக மணி மூன்று தடவை அடிக்கிறது. மனம் ஆனந்தத்தால் நிறைய...

கண்ணை விழிக்கிறேன்! வாசலில் பால்க்காரன் மணியடிக்கிறான். அதிகாலையில் ப்ரம்மமுகூர்த்தத்தில் கண்ட கனவு நல்ல பலனைத் தரும் என்கிறார்கள் நண்பர்கள்.

பகவானின் கருணை இத்துடன் முடிந்து விடவில்லை! இனித்தான் உண்மையான அற்புதமே ஆரம்பமாக இருக்கிறது.

அன்று வியாழக்கிழமை; பஜனை முடிவில் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தமை பகவானின் சித்தமே ஜப்பானின் கொபே நகரத்தில் இடம் பெற்ற பூமி நடுக்கம் பற்றியும், அங்கே சிறு குழந்தையும் சாயி அடியார்களும் காப்பாற்றப் பட்டதையும் கூறி, நான் கண்ட கனவையும் விபரித்

தேன். 'அவர்களுடைய வீடுகள் அழிந்தன, உடமைகள் சேதமடைந்தன. ஆயினும் அவர்களுக்கு எந்த உடற்பாதிப்பும் ஏற்படவில்லை. இதை சுவாமி ஒரு செய்தி மூலம் உறுதிப் படுத்தினார். அதே போல எங்கள் வீடுகள் அழியலாம், பொருள் பண்டங்கள் சேதமடையலாம் ஆயினும் பகவான் எமது உயிர்களை நிச்சயம் காப்பாற்றுவார்...' என்று தொடர்ந்த போது அந்த அற்புதம் நிகழ்ந்தது.

பீடத்திலே, பகவானின் படத்தின் மேற்பகுதியிலே சூடப்பட்டிருந்த ரோஜா மலர் ஒன்று படத்தின் முன்புறமாக சற்றுத் தூர இருந்த செம்பு நீரிற்குள் பறந்து சென்று வீழ்ந்தது. ஏதோ தற்செயலான சம்பவம் என்று எண்ணினர் சிலர், அற்புதம் என அக மகிழ்ந்தனர் வேறு சிலர்.

சற்று நேரத்தில் இன்னுமொரு ரோசாப்பூவும் அதேபோல் செம்பிற்குள் துள்ளி விழுந்தது. பகவானின் கருணையைக் கண்ட சாயி அன்பர்கள் அனைவருமே சாயிராம், சாயிராம் என அரற்றினர். பேச்சு முடிவதற்குள் மூன்றாவது பூவும் அதேபோல் செம்பிற்குள் வீழ்ந்ததை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அன்பர்கள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று பூக்கள் தீர்த்தச் செம்பினிற்குள் விழுவது பகவானின் அற்புதமன்றி வேறெதுவாக இருக்க முடியும். 'எனது சங்கல்ப்பம் இல்லாமல் எவரும் என்னைக் கனவில் கூடத் தரிசிக்க முடியாது' என்று கூறிய சுவாமி தனது அபயக்கரத்தை கனவில் காட்டியது மாத்திரமின்றி, அதனை இவ்வாறு உறுதிப்படுத்தியதும் என்னை மெய் சிலிர்க்க வைத்தது.

அன்று, சுவாமி பஜனையில் பிரசன்னமாயிருந்ததுடன் அனைவரையும் காப்பாற்றுவேன் என்ற உறுதி மொழியையும் இச் சம்பவம் மூலமாக வழங்கியிருக்கிறார் என்பதை உணர்ந்த அன்பர்கள் அனைவரும் பயம் நீங்கி மன நிறைவோடு பஜனையிலிருந்து திரும்பினர்.

சுவாமியின் உறுதிமொழி பொய்க்கவில்லை;

எந்த ஒரு சாயி அன்பராவது அப்போரில் இறக்கவில்லை. எமது நிலையத் தலைவர், உபதலைவர், பொருளாளர், சில அங்கத்தவர்கள் ஆகியோர்களது வீடுகளுக்கு மிக அருகில் சுற்றுமதில், ஓரமாகக் கூட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. வட பிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் சேவைப்பணிப்பாளரின் இல்லம், ஆத்தியடி, கற்கோவளம் பஜனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு அண்மையிலும் ஷெல்களும் குண்டுகளும் விழுந்தன. சிலரது வீடுகளுக்குள் குண்டுச் சிதறல்கள் வந்து தெறித்தன.

ஆயினும் உறுதிமொழிக்கு மேலாக, அவர்கள் மாத்திரமின்றி அவர்களது வீடுகளும் உடமைகளும் கூடக் காப்பாற்றப்பட்டன. சோதனைகள் நிறைந்த அந்நேரத்தில் சாதனைகள் பல செய்யப்படுவதற்கும் சுவாமி மன உறுதி கொடுத்தார். 6 வது உலக மகாநாட்டு தீர்மானங்கள், இளைஞர் பகுதி ஆகியவை பற்றிய இரு பட்டறைகள், குருமாருக்கான கருத்தரங்கு, பொது மக்களுக்கான கருத்தரங்குகள், மாபெரும் சிவராத்திரி விழா, மந்திகை நிலையத்தில் நாளாந்த ஓம்காரம், சுப்ரபாதம், வியாபாரிமூலை நிலையத்தில் வாராந்திர ஆத்மீக சாதனைகள் என சாயி பணிகள் விரிந்து படர்ந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக இடம் பெயர்ந்து தத்தளித்தவர்களையும் தத்தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்லவும் வழி சமைத்துவிட்டார் சுவாமி.

உங்கள் எல்லையில்லாக் கருணைக்கு

அடிபணிகிறோம் சுவாமி.

ஓம் ஸ்ரீ சரணாகத த்ராணாய நமஹ.

— அடியவன்

வியாபாரிமூலை சத்ய சாயி நிலையம்.

# மாணவர் பகுதி

அன்புள்ள மாணவர்களே!

நீ எந்த மந்திரத்தைச் சொல்லா விட்டாலும் காயத்திரி மந்திரத்தை இடைவிடாமல் சொல். மாணவர்களுக்கு காயத்திரி மந்திரம் மிகவும் அவசியம். ஏனெனில் அவர்களது எதிர்காலம் மங்களகரமாக இருக்கவேண்டும்.

இன்றிலிருந்து காயத்திரி மந்திரத்தை காலை, பகல், மாலை என்று மட்டுமில்லாது எப்பொழுது வேண்டுமோ அப்பொழுதெல்லாம் சொல்லிவர வேண்டும்.

பல் விளக்குவது, குளிப்பது போல இதையும் ஒரு கட்டாயமான வேலையாக எண்ணிச் செய்யுங்கள். குளிக்கும் போது காயத்திரி மந்திரம் சொல்லிக்கொண்டே குளித்தால் அது காயத்திரி தேவிக்கு அபிஷேகம் செய்ததாக ஆகிவிடுகிறது. உணவு உண்ணும் முன்பு காயத்திரி மந்திரம் சொன்னால் அந்த உணவு தெய்வத்திற்கு நைவேத்தியமாக மாறுகிறது.

23-8-1995

— பாபா



எல்லாச் சமயங்களையும் உற்றார், உறவினராக வரவேற்புஅளியுங்கள். வேதங்கள்தான் பெரிய தாத்தா. புத்த சமயம்தான் மகன், கிறிஸ்தவ சமயமே பேரன், இஸ்லாமிய சமயமே கொள்ளுப் பேரன். எப்பொழுதாவது ஏதாவது தவறாக அர்த்தம் செய்யப்பட்டால் அது ஒரு குடும்ப விவகாரமே ஆகும்.

- பாபா

## இனிமையான பேச்சு

பேசுவது ஒரு கலை. எமது பேச்சின் மூலம் நாம் மற்றவர்களைக் கவரவும் முடியும், அவர்களின் வெறுப்பிற்கு ஆளா கவும் முடியும், அன்பைப் பெறவும் முடியும், கோபத்திற்கு ஆளாகவும் முடியும், மதிப்பைப் பெறவும் முடியும், அவமதிப் பிற்கு ஆளாகவும் முடியும்.

மற்றவர்களுடன் உரையாடும் போது எமது பேச்சு முறை எப்படி இருக்க வேண் டும்? பகவான் பாபாவின் போதனைப்படி நடப்பதுதான் சிறப்பானது. பகவான் பாபா இதைப்பற்றிக் கூறியிருப்பது என்ன?

'ஒவ்வொருவரிடமும் மெதுவாகவும், பணிவாகவும் பேச வேண்டும்'.

'மற்றவர்களைப் பற்றி கெடுதலாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்'.

'உங்கள் பேச்சு தேனைப் போல் இனிமையாக இருக்க வேண்டும்'.

குழந்தைகளே, வீட்டிலும், வெளியிலும் பகவான் கூறியவற்றைக் கடைப்பிடி யுங்கள். நீங்கள் பேசும் போது 'தேன் வந்து பாயுது காதினிலே' என்று மற்றவர் கள் மகிழ்ச்சியடையும் வண்ணம் உங்கள் சொற்களைத் தெரிந்தெடுங்கள்.

## பிரியமான குதிரை

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனிடம் ஓர் அழகிய குதிரை இருந்தது. அவன் அதனிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தான். உலகிலுள்ள எந்தப் பொருளையும் விட அவன் அக் குதிரையில் தான் மிகவும் பிரியமாக இருந்தான்.

அக்குதிரைக்குச் சிறிய துன்பம் நேர்ந் தாலும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாமல் வேதனைப் படுவான்.

ஒரு நாள் அக்குதிரைக்குத் திடீரெனக் கடும் நோய் ஏற்பட்டது. அந்த நாட்டில் உள்ள மிகச் சிறந்த மிருக வைத்தியர்கள் அனைவரையும் அதனைக் குணப்படுத்துவ தற்காக வரவழைத்தான். அவர்கள் வந்து, குதிரையைப் பரிசோதித்தனர். தமக்குள் கலந்து ஆலோசித்து மிகவும் சிறந்த மருந்து களைக் கொடுத்தனர் ஆயினும் குதிரை கடுமையாக நோய்வாய்ப் பட்டிருந்ததால் அதனைக் காப்பாற்றுவது கடினம் என அபிப்பிராயப்பட்டனர்.

இதை அறிந்த அரசன் மிகவும் கவலை யடைந்தான், கலக்கமடைந்தான். என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று தெரி யாமல் தடுமாறினான். 'குதிரை இறந்தது என யார் வந்து எனக்குக் கூறுகிறரோ அவருடைய உயிரைப் பறிப்பேன்' என ஆவேசமாகக் கத்திவிட்டுத் தனது மாளி கைக்குச் சென்று விட்டான்.

குதிரையைக் காப்பாற்ற முடியவில்லை! அன்று இரவு குதிரை இறந்தது. மந்திரி களும் ஏனைய ஊழியர்களும் கலக்கமடைந் தனர். குதிரை இறந்த செய்தியை அரசனுக்குச் சென்று கூற எவருமே முன் வரவில்லை; தங்களுக்குள் கூடி ஆலோசித் தனர் எல்லோர் மனத்திலும் பயமும். கவலையும் நிறைந்திருந்தது, எவருக்குமே அரசனிடம் செல்லத் துணிவு வரவில்லை.

இறுதியாக ஒரு இளம் துறவி அரசனி டம் சென்று செய்தியைக் கூற முன்வந் தார். நாளைக்கு இவர் உயிரோடு இருக்க மாட்டாரே என்று எல்லோரும் அவரைக் கவலையுடன் பார்த்தனர். ஆயினும் துற வியின் முகத்தில் பயமோ கவலையோ இருக்கவில்லை. அவர் அமைதியாக இருந் தார்,

அரசனிடம் சென்ற துறவி 'உங்களுக்கு குதிரை பற்றிய செய்தி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்றார். 'கெதியாகச் சொல்! குதிரை எப்படி இருக்கிறது?'

என்று அரசன் அவதிப்பட்டான். துறவி நிதானமாக தனது சொற்களைத் தேர்ந் தெடுத்துப் பேசினார்.

'உங்கள் குதிரை தனது கொட்டிலில் படுத்திருக்கிறது. அது சாப்பிடவும் இல்லை, நீர் அருந்தவும் இல்லை. அது நித்திரை கொள்ளவும் இல்லை. மூச்சு விடவும் இல்லை' என்று சலனமின்றிக் கூறினார்.

அரசன் நாற்காலியை விட்டுத் துள்ளி எழும்பினான்! 'அப்படியானால் குதிரை இறந்து விட்டது' எனக் கத்தினான் அரசன்.

'நீங்கள் சொல்வது மிகவும் சரி' எனத் துறவி கூறினார். 'ஆயினும் அந்தச் செய்தியை நீங்கள் தான் கூறினீர்கள்' என்று தொடர்ந்து கூறினார் துறவி.

அரசன் கவலையடைந்தான் ஆயினும் தனது மனம் புண்படாமல் குதிரை இறந்த செய்தியைத் தனக்குத் தெரிவித்த துற வியின் புத்திசாலித்தனத்தையும், பண்பான பேச்சையும் மெச்சினான். பரிசுகள் கொடுத் தான்.

எனவே நாம் மற்றவர்களுடன் பேசும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது சொற்கள் மற்றவர்கள் மனத்தைப் புண்படுத்தாதபடி இருக்க வேண்டும். இனிமையாகவும், பண்பாகவும் பேசினால் கேட்பவர்கள் சந்தோஷமடை வார்கள். எமக்கும் நன்மை கிடைக்கும்.

ஆதாரம்;

'வேதாந்த' - ஆங்கில சஞ்சிகை

---

## கசப்பான பேச்சு

புத்தர் பகவான் ஒரு கிராமத்தின் வழி யாகச் சென்று கொண்டிருந்தார், அந்த ஊர் மக்கள் அவரைப் பற்றி கேவலமாக அவதூறு பேசினர், திட்டினர், அவமதித் தனர்.

அவர்களின் ஏச்சுப் பேச்சுக்களை அவர் அமைதியாகவும், பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு அவர் களைப் பார்த்து "நான் இப்பொழுது அடுத்த கிராமத்திற்குப் போக வேண்டி யுள்ளது. அங்கு பலர் எனக்காகக் குறித்த நேரத்தில் காத்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் இன்னமும் ஏதாவது எனக்குச் சொல்ல விரும்பினால், நான் திரும்பி வரும் போது உங்களுக்கு நேரம் ஒதுக்குகிறேன். அப்பொழுது நீங்கள் சொல்ல வேண்டிய மிகுதியையும் சொல்லலாம்". என்றார்.

புத்தர் சொன்னதைக் கேட்டதும்... அவர்களுக்கு ஒரே ஆச்சரியம். நாம் திட்டிய போதும் இப்படிப் பதில் சொல்கிறாரே என எண்ணினர். "நாங்கள் ஒன்றும் சொல்ல வில்லை; உங்களை அவமானப்படுத்திக் கொண்டல்லவா இருந்தோம்' என்றனர்.

"அது உங்கள் விருப்பத்தைப் பொறுத் தது; ஆனால் அதை ஏற்றுக் கொள்வதோ, விடுவதோ எனது விருப்பத்தைப் பொறுத் தது.... இப்பொழுது நீங்கள் சொல்லிய வற்றை நான் ஏற்றுக் கொள்ளவில்லை" என்றார் புத்தர் புன்சிரிப்புடன்.

மக்கள் வியப்புடன் அவரைப்பார்த்துக் கொண்டு நின்றபோது புத்தபிரான் மீண்டும் பேச ஆரம்பித்தார். "நான் இங்கு வருவதற்கு முன் வேறு கிராமம் வழியாக நடந்து வந்தேன். அந்த மக்கள் எனக்கு நிறைய இனிப்புக்களைக் கொண்டு வந்து தந்தனர். 'உங்கள் அன்பிற்கு நன்றி; நான் இனிப்புக்கள் சாப்பிடுவதில்லை. அதனால் எனக்கு இனிப்புக்கள் வேண் டாம், என்றேன்" என்றார்,

அப்பொழுது புத்தபிரான் இந்த மக் களிடம் ஓர் கேள்வி கேட்டார். "நான் வேண்டாம் என்று சொன்ன பின் அந்த இனிப்புக்களை அவர்கள் என்ன செய்திருப்

(தொடர் பக்கம் 19ல்)

*பிரசாந்தி நிலையத்திலிருந்து ஓர் கடிதம்*

ஓம் சாயிராம்

மத்திய காரியாலயம்

## ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனங்கள்

பிரசாந்தி நிலையம்,

18—06—96

எல்லா மத்திய இணைப்பாளர்களுக்கும் (வெளிநாடு),

அன்புள்ள சகோதரா,

சாயிராம்

சாயி பாபா ஆச்சிரமத்திலிருந்து வெளிவரும் சனாதன சாரதி சஞ்சிகை மூலம் பின் வரும் விடயங்கள் காலத்திற்குக் காலம் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன.

* பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா தன் சார்பில் பேசுவதற்கோ, செயற்படுவதற்கோ எவருக்கும் அதிகாரம் கொடுப்பதில்லை,
* சில நபர்கள் தங்களுக்கு பகவானிடமிருந்து சூக்குமமான முறையில் செய்திகள் வந்திருக்கின்றதென்றோ, ஏதோவொரு குறிப்பிட்ட முறையில் பேசுவதற்கோ, செயற்படுவதற்கோ தாங்கள் பகவான் பாபாவினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக் கிறோம் என்றோ உரிமைகோருவதைக் கேட்டு மக்கள் ஏமாறக் கூடாது.
* அதே போன்று, தங்களுடைய வேலைத் திட்டங்களை (அதிலும் சில திட்டங் களுக்கு சாயிபாபாவின் பெயரைச் சூட்டி) பகவான் பாபா ஆசீர்வதித்து விட்டார் என்று சொல்பவர்கள், தங்கள் செல்வாக்கைக் கொண்டு பாபாவின் செவ்வியைப் பெற்றுத்தர முடியும் எனச் சொல்பவர்கள், நோய்களைக் குணப்படுத்தவும், விபூதி மற்றும் பொருட்களைக் கையசைப்பினால் வரவழைப்பதற்கும் பகவான் பாபாவால் தங்களுக்கு விசேட சக்திகள் அருளப்பட்டிருக்கிறதென்றும் சொல்பவர் கள் - இவர்கள் பேச்சைக் கேட்டு மக்கள் ஏமாறக் கூடாது.

இத்தனை அறிவுறுத்தல்களுக்குப் பின்பும், இந்தியாவிலும் சில வெளிநாடுகளிலு முள்ள சில தனிப்பட்ட நபர்கள் மேற்கூறிய தகைமைகள் தொடர்பாக உரிமை கோருவது டன், பகவான் பாபாவின் நாமத்தை வர்த்தக நோக்கங்களுக்காகவும், பணம் சேகரிப்பதற் காகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும், துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் இடம் பெறவே செய்கின்றன.

பகவான் பாபா தனிநபர்களை தரகர்களாகவோ, தன் சார்பில் பேசுவதற்கோ செயற்படுவதற்கோ அதிகாரம் கொடுப்பதில்லை என்பதையும் நேரடியாகவே பக்தர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்கிறார் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் தயவு செய்து அறியத்தரவும்: குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் பகவானால் ஆசீர்வதிக்கப்

பட்டது அல்லது சாயி சேவைத் திட்டங்களுடன் சம்பந்தப்பட்டது என்ற தவறான வழி நடத்தலுக்கு ஏமாறி தமது பணத்தைக் கொடுக்காமல் இருக்கும்படி தனிப்பட்டவர்களையும், ஸ்தாபனங்களையும் எச்சரிக்கவேண்டும்,

நோய்களைக் குணப்படுத்தும் சக்தியையோ, பொருட்களை வரவழைக்கும் ஆற்றலையோ பாபா ஒருவருக்கும் கொடுப்பதில்லை. அந்த ஆற்றல் தங்களுக்குத் தரப்பட்டிருக்கிறதென்று எவராவது சொன்னால் அது முற்றாக நிராகரிக்கப்படவேண்டும். அத்தகைய போலி நபர்களின் செயற்பாடுகள் பற்றி, பக்தர்களோ ஏனையவர்களோ அறியவந்தால், அவர்கள், எதையும் நம்பும் அப்பாவி மக்கள் தவறான வழியில் செல்லாமலும் சுரண்டப்படாமலும் இருப்பதற்கு தங்களால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த ஆச்சிரமத்திற்கு வரும் பக்தர்களை, சில சுயநல விரும்பிகள், நம்பிக்கையூட்டும் ஏமாற்றுக் கதைகள் கூறி வேறு சாதுக்கள் முதலியோரை தரிசிக்க இட்டுச் செல்லும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. அவர்களின் பணம் பறிபோவதுடன். தங்களைப் பாதிக்கக் கூடிய பலவகையான விரும்பத்தகாத செயல்களில் தங்களை அறியாமலே தள்ளப்படுவதுமே அவர்கள் பெறும் பலனாகும். இத்தகைய செயற்பாடுகள் பற்றி பக்தர்கள் அனைவரும் அவதானமாக இருக்கும்படி எச்சரிக்கப்படவேண்டும். தங்கள் ஆத்மீக சாதனையில் ஒருமுனைப்பான கவனத்துடன் ஈடுபட வேண்டியதின் அவசியமும் வலியுறுத்தப்பட வேண்டும்.

பஜனைகளிலும் ஏனைய கூட்டங்களிலும் இக்கடிதம் வாசிக்கப்படுவதுடன், எல்லா பஜனை நிலையங்களிலும் பக்தர்களின் பார்வைக்கு உகந்த இடத்தில் வைப்பதற்கும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகைகளிலும் பொருத்தமான செய்தியாக இதை வெளியிடுவதற்குக் கவனம் செலுத்தலாம்,

இங்ஙனம்
சாயி சேவையில்.
**D. ஹெஜ்மாடி**
மத்திய காரியாலயம்.

---

17ம் பக்கத் தொடர்ச்சி)

பார்கள்". கூட்டத்திலிருந்த ஒருவர் "அவர்கள் அந்த இனிப்புக்களைத் தங்களது வீட்டுக்கே எடுத்துச் சென்றிருப்பார்கள்' என்றார்.

"அதைத்தான் நீங்களும் செய்யப் போகிறீர்கள். உங்கள் பேச்சுக்களையும், திட்டுக்களையும், அவதூறுகளையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவற்றை நீங்கள் திரும்பவும் எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான். வேறு வழி இல்லை" என்று புத்தர் அமைதியாகக் கூறினார். அவர் கூறியதைக் கேட்டு யோசித்த மக்கள் மனந்திருந்தினர்,

ஆதாரம்;
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், மே 1995

## கோடைக்கானலில்

# சத்ய உபநிஷதம்

பகவான் 1992ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் M. B. A மாணவர்கள், மற்றும் பிரசாந்தி நிலைய வைட்பீல்ட் வளாகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பக்தர்கள் சகிதம் கோடைக்கானலுக்கு விஜயம் செய்தார். சாயி சுருதி என்றழைக்கப்படும் அழகான முன்றிலில் சுவாமி ஒவ்வொருநாளும் வழங்கிய அருளுரைகள் பெரும்பாலும் உபநிடதத்தில் இருப்பது போல கேள்வி பதில் முறையில் அமைந்திருந்தன.

*மனித முயற்சியின் பங்கு என்ன? அது எப்படி கடவுளின் கருணையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது? இவ்விரண்டில் எது அதிமுக்கியம் வாய்ந்தது?*

திட நம்பிக்கையோடு கூடிய மனித முயற்சியினால் எதையும் அடைந்துவிடலாம் என்றும் அதற்குக் கடவுளின் கருணை தேவையில்லை என்பதும் மேலை நாட்டுக் கல்வி பயின்றவர்களின் உணர்வாகும்.

உதாரணமாக ஒரு தட்டிலுள்ள சப்பாத்தியையும், குருமாவையும் எடுத்துக் கொள்வோம். அவைகளை அந்நிலையிலேயே விழுங்க முடியாது: எங்களின் இரைப்பைக்குள் அவை தானாகவே வந்து சேரவும் மாட்டாது. இதில் வாய்க்கும் கையுக்கும் வேலையிருக்கிறது. கை இவைகளை வாய்க்குள் புகுத்திய பின்தான் உண்ணல் தொடங்குகின்றது. உணவின் பெயரை ஓதிக்கொண்டிருந்தால் ஒன்றும் நடவாது. (இதன்படி சுவாமி உணவை கையினால் செலுத்துவதை மனித முயற்சியென்றும், அதை சமிபாடடையச் செய்வது தெய்வத்தின் கருணையென்றும் அறிவிக்கின்றார்.) இதற்கு இன்னுமொரு உதாரணம்: ஒரு வயலில் விதையை விதைப்பது மனிதமுயற்சி; முளைப்பதற்கும் வளர்வதற்கும் சரியான காலத்தில் மழையும் நல்ல காலநிலையும் தருவது கடவுளின் கருணையாகும். மேலும் ஒரு உதாரணம்; ஒரு மின் குமிழி, ஆளி (சுவிட்ச்), மின்சாரம். விளக்கை எரியவிடக் கூடிய நிலையில் ஆளியை வைத்தால்தான் மின்சாரம் மின்குமிழியில் போய் பிரகாசத்தைக் கொடுக்கும். இதில் எரியக் கூடிய நிலையில் ஆளியை வைத்தல் மனித முயற்சி. மின்குமிழியில் எரியச் செய்வது கடவுளின் கருணை.

*ஒருவர் ஏன் ஆன்மீகப் பயிற்சி அல்லது சாதனை செய்யவேண்டும்?*

உதாரணத்திற்கு களிமண்ணை எடுப்போம். மூலப்பொருளான களிமண், பானைகள் பாத்திரங்கள் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. காலக்கிரமத்தில் அவை உடைந்து ஒதுக்கப்படுகின்றன. அப்போது அவை மீண்டும் மூலப்பொருளான மண்ணாகின்றன, அதுபோல சாதனை அல்லது ஆத்மீகப்பயிற்சி மனிதனை சுயமான இயற்கை நிலைக்குப் போக வழிகாட்டுகிறது. சமுத்திரத்திலிருக்கும் நீரானது சூரியனின் வெப்பத்தால் ஆவியாக மாற்றப்பட்டு பின்பு முகில்களாக வருகின்றது. முகில்களிலிருந்து பெய்யும் மழையானது, மீண்டும் ஆறுகளாகி சமுத்திரத்தில் பாய்ந்து போகின்றது. இது போல ஒருவரின் சொந்த இடத்தையோ அல்லது நிலையையோ அடைவதுதான் சாதனையின் நோக்கம்.

*சாதனை ஒரு கடினமான செய்முறையா?*

சாதனையில், கடுமையானது என்று எதுவுமில்லை. ஆயினும் சிலருக்கு இது ஓரளவு கடுமையாகத் தென்படலாம். எனினும் இதில் ஓரளவு முயற்சி சம்பந்தப் பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இது இதைப் போல் ஒத்திருக்கிறது: கோடைக்கானலை அடைய பஸ்கள் மலையின் மேல் நோக்கிச் செல்வதைக் காண்கிறோம். மேலே போகும் முயற்சியில் அவைகள் உறுமிக்கொண்டு ஏறுகின்றன. ஆனால் கீழே இறங்கி வரும்போது பதட்டமில்லாமல் குறைந்த முயற்சியுடன் வருகின்றன. ஏற்றம் முயற்சியுடன் கூடியது; இறக்கம் சுலபமானது என்பது இதன் கருத்தாகும். இது போல ஒருவர் ஆன்மீக உச்சத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். பதிலாக ஒருவர் வீழ்ச்சியைத் தெரிவு செய்தால் மிகவும் எளிதாக வழுகிக் கொண்டே சரிவில் கீழிறங்கலாம். மேலும் தர்ம வழியில் செல்பவர்கள் சுவர்க்கத்தையும் பாவங்களைச் செய்பவர்கள் நரகத்தையும் சென்றடைவார்கள் என்று நம்பப்படுகிறது. ஆசனங்கள் ஒதுக்கப்படாத புகைவண்டிப் பெட்டிக்கு சனங்கள் நெருங்கியடித்துக் கொண்டு போவது போல அதிக சனங்கள் நரகத்தை நோக்கிப் போவதால் அங்கே போகும் பாதை அகலமானதும் விசாலமான இடமாயும் இருக்கிறது.

இதற்கு மாறாக சுவர்க்கத்தின் பாதை ஒடுக்கமானதும் ஒப்பீட்டளவில் சிறியதாகவும் இருக்கின்றது. ஏனென்றால் ஒருசிலரே அங்கே போக தகுதி பெற்றிருக்கிறார்கள். இதன் தாற்பரியம் என்னவென்றால் ஆத்மீகப்பாதை மிகவும் ஒடுக்கமானது என்பதாகும். ஒருவர் முயற்சி செய்து ஜாக்கிரதையாக அடிவைத்துத்தான் அதைப்பிடிக்க வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் சாதனைக்குச் சில முயற்சிகள் தேவை. ஆனால் இதையடைவது ஒரு இயலாத காரியமல்ல.

ஒருவர் ஆத்மீக முயற்சியில் அல்லது சாதனையின் வழியில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளார் என்பது எப்படி அறியப்படுகிறது?

அநேகமானவர்கள் சாதனையை தாங்கள் பயில்வதாக பெருமையடிக்கிறார்கள். சிலர் தினமும் கடவுள் வழிபாடு செய்வதாக பெருமை கொள்கிறார்கள். இன்னும் சிலர் வேதாகமங்களைத் தினமும் படிப்பதான பெருமை அடைகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் எதை அடைந்திருக்கிறார்கள்? சாதனையில் என்ன முன்னேற்றத்தை எட்டியிருக்கிறார்? அந்த முன்னேற்றத்தின் அளவு என்ன? உதாரணத்திற்கு ஊசற்கட்டை ஆட்ட(*See Saw*)த்தில் ஒரு தட்டில் மனிதர்களும் மறுதட்டில் கடவுளுமிருப்பதாகக் கற்பனை பண்ணுங்கள். மனித இனத்தின் ஆறு பகைவர்களாகிய ஆசை, கோபம், பேராசை, காமம், பெருமை, பொறாமை ஆகியவற்றை மனிதன் பிரதிநிதிப் படுத்துகின்றான். கடவுளோ சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகிறார். இந்த ஆறு உட்பகைவர்களின் முயற்சி குறைந்தால் ஊசற்கட்டையாட்ட ஆத்மீக மட்டம் மேல் நோக்கிச் செல்லும். மனிதன் ஆத்மீகப் பாதையில் முன்னேறிச் செல்வான். பதிலாக, இப்பகைவர்களின் முயற்சிகள் ஆதிக்கஞ் செய்யத் தொடங்கினால், ஆத்மீக மட்டம் குறைந்து, சாதனையில் பின்னடைவு ஏற்படும். தினமும் வேதாகமங்களைப் படிப்பதாலும் அல்லது பூஜை செய்தாலும் கூட இந்த முடிவையே அடையக் கூடியதாக இருக்கும்.

ஆகவே நீ ஆத்மீகப்பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால், கடவுளின் தன்மைகள் மனிதனின் உட்பகைவர்களின் மேல் ஆதிக்கமும், அதிகாரமும் செலுத்தக் கூடிய நிலையைப் பெற வேண்டும். அப்போது கடவுளின் பக்கமுள்ள தட்டு மேலெழும்பி சாதனையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

பாபா நீங்கள் ஏன் சனங்களை நிமிர்ந்து உட்கார வேண்டுமென்று- இது சிறிது நேரத்தின் பின், முது கெலும்பில் நோவை உண்டாக்கி னாலும் கூட- அறிவுரை கூறுகிறீர் கள்? கடைசியாக இதனுடைய பயன் என்ன?

விளிம்புவரை எண்ணெய் நிரம்பியுள்ள ஒரு போத்தலை கற்பனை பண்ணுங்கள். அதை செங்குத்தாக தலைகீழாக மாற்றி வையுங்கள். ஒருதுளி எண்ணைய் கூட வெளியில் வராது. அதே போத்தலை சரி வான நிலையில் வையுங்கள்; எண்ணை வெளியில் ஒடும், அதேபோல் குனிந்த முது கெலும்புள்ளவர் விவேகத்தில், ஞாபகசக்தி யில், சக்திவளத்தில் குறைவுள்ளவராக வருவார். அவர் பலமற்றவராக இருப்பார். இதற்கு மாறாக நேராக நிமிர்ந்து இருப் பவரது குண்டலினி (ஒரு வித ஆத்மீகசக்தி) மேல் எழுந்து நன்மையடைவார். இதன் பயனாக அவரது விவேகம், ஞாபகசக்தி, சக்திவளம் ஆகியன ஊட்டம் பெறும்.

சுவாமி! தெய்வீக அவதாரத்தை அறிந்து கொள்ளத் தேவையான பிர மாணம் என்ன?

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களும் ஒரு தெய்வ அவதாரத்தின் கடமைகள் என்பதை பல ஆத்மஞானிகள் நன்கு அறிவர். இத்துடன் எல்லோரிடத்திலும் அன்புகாட்டுதலும் எல்லோராலும் அன்பு காட்டப்படுதலும் தெய்வீகத்தன்மையின் இரு குணங்களாகும்.

மதிப்பளிப்பது என்பது அன்புகாட்டு வது அல்லது வணங்குவது என்று அர்த்தப் படாது. நீங்கள் ஒரு பிரதம மந்திரியை மதிக்கலாம் அல்லது சிலாகித்துக் கொள்ள லாம். ஆனால் அது அன்பு செலுத்தலோ வணங்குதலோ ஆகாது. நீங்கள் உங்களு டைய அன்னை மீது அன்பு காட்டலாம்! ஆனால் அது ஆராதிப்பது ஆகாது. உங்கள் நண்பர்கள் மீது அன்பு செலுத்துகிறீர்கள்; பூசிப்பதில்லை. இதேபோல் அன்பு செலுத்துவது என்பது வணங்குவதிலிருந்து வேறுபட்டது. அன்பையும், பயபக்தியையும் கவருவதும் இணைப்பதும்தான் அவதாரத் தின் விசேட தன்மையாகும்.

From - Sai Reflections, May 95.

தமிழில்;-

— ஸ்ரீ S. வல்லிபுரம்

---

## சாயி நிறுவனச் செய்திகள்

### இரு பட்டறைகள் (Work Shop)

யாழ், வலிகாம மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்திருந்த போது, வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழு இருபட்டறைகளை மந்திகை சத்யசாயி நிலையத்தில் நடாத்தியது. இடப்பெயர்வால் சிதறிக் கிடந்த சத்ய-சாயீ நிலையங்கள், பஜனை நிலையங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் திட்ட மிட்டுச் செயலாற்றவும் இவை உதவின.

### (i) 6வது உலக மகாநாட்டின் தீர் மானங்களை செயற்படுத்தல்

இது சம்பந்தமான பட்டறை 28-01-1996 ஞாயிறு நடைபெற்றது. அறுபது பேர் வரை கலந்து கொண்ட பட்டறை ஆன்மீகம், சேவை, கல்வி, இளைஞர் பகுதி ஆகிய நான்கு பிரிவுக ளாகப் பிரிந்து குழு நிலையில் விவாதித்து 6வது உலக மகாநாட்டின் தீர்மானங் களைச் செயற்படுத்தும் வழிமுறைகளைச் சிபார்சு செய்தது. நடுவராகப் பணி

ஆற்றிய பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் பட்டறையின் நோக்கங்களையும் வழிமுறைகளையும் முதலில் விளக்கினார். மத்திய இணைப்பாளர் ஸ்ரீ எஸ். சிவஞானம், இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ எஸ். விஜயரட்ணம், ஆன்மீக இணைப்பாளர் ஸ்ரீ எஸ். ஆர். சரவணபவன் சேவைக் குழு இணைப்பாளர் ஸ்ரீ வீ. சேனாதிராசா, கல்விப்பகுதி இணைப்பாளர் திருமதி எம். சரவணபவன், இளைஞர் பகுதி இணைப்பாளர் ஸ்ரீ கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் ஆலோசகர்களாகப் பணிபுரிந்தனர்.

பட்டறையின் தீர்மானங்களின் தொகுப்பு தட்டச்சுப் பிரதி செய்யப்பட்டு ஒவ்வொரு நிலையத்தின் செயற்பாட்டிற்கு உதவுமாறு வழங்கப்பட்டது.

### (ii) இளைஞர் பிரிவு

3-3-1996ல் நடைபெற்ற கருத்தரங்கில் நிலையப் பிரதிநிதிகள், வாலிபர், இளம் வயதினர் எனச் சுமார் அறுபது பேர் கலந்து கொண்டனர். அங்கத்தவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து, செயற்பட்டனர். இளைஞரை இனங்காண்பதும் அவர்களைச் சேர்ப்பதற்குமான வழிமுறைகள், இளைஞர் பிரிவின் கட்டமைப்பு, பயிற்சி, நிறுவனத்தின் மற்றப் பிரிவுகளுடன் ஒத்துழைப்பு ஆகிய நான்கு தலைப்புகளில் குழு நிலையில் விவாதித்துச் சிபார்சுகளைச் செய்தது. பட்டறையின் தலைவராக ஸ்ரீ எஸ். விஜயரட்ணம், இணைப்பாளரும் செயலாளருமாக ஸ்ரீ கே. கணபதிப்பிள்ளை ஆலோசர்ககளாக ஸ்ரீ எஸ். சிவஞானம், பேராசிரியர் செ- சிவஞானசுந்தரம், ஸ்ரீ எஸ். ஆர். சரவண- பவன், ஸ்ரீ வீ. சேனாதிராசா, ஸ்ரீமதி எம்- சரவணபவன் ஆகியோர் பணி புரிந்தனர். இளைஞர் பகுதி இணைப்பாளர் ஸ்ரீ கே. கணபதிப்பிள்ளையின் முன்முயற்சியால் நடாத்தப்பட்ட இப்பட்டறை இளைஞர் குழு அமைப்பது பற்றிய கருத்துத் தெளிவை ஏற்படுத்தியது.

## குரு பூர்ணிமா தினமும் காயத்ரி விழாவும்

யாழ் திருநெல்வேலி சத்ய சாயி நிலையத்தில் மேற்படி விழா 30-7-1996 செவ்வாய் காலை 8.15 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இவ்விழாவின் சிறப்பு அம்சமாக காயத்ரி மந்திரம் 108 தடவைகள் ஓதப் பட்டது. பகவானின் கட்டளைக்கு இணங்க காயத்ரி மந்திரத்தைப் பரப்புவதற்காக அறிமுகப் பயிற்சிக் கூட்டங்கள் நடாத்தப் பட்ட பாடசாலைகளான ஸ்ரீ நாவலர் மகாவித்தியாலயம், செங்குந்தா இந்துக் கல்லூரி, இந்து மகளிர் (கனிஷ்ட) கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் P. கோபாலகிருஷ்ணன் காயத்ரி மந்திரத்தின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார். நாராயண சேவையும் இடம் பெற்றது.

யாழ் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு சத்ய சாயி நிலையங்களிலும் பஜனை நிலையங்களிலும் குருபூர்ணிமா தினம் காயத்ரி விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

## உலக அங்கவீனர் தினம்

கொக்குவில் சத்ய சாயி நிலையத்தினர் உலக அங்கவீனர் தினத்தையொட்டி காந்திஜி கிராமத்தில் சுகாதார கேள்வி பதில் நிகழ்ச்சி ஒன்றை நடாத்தினர். பல பொதுமக்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு, யாழ் மருத்துவபீட சமுதாயநல வைத்தியத் துறையைச் சார்ந்த வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் விளக்கங்கள் அளித்தார்.

கோப்பாய் சத்யசாயி நிலையத்தினர், அனர்த்தத்தின் போது சேதமடைந்திருந்த வறிய குடும்பத்தினர். ஒருவரின்

வீட்டைத் திருத்திக் கொடுத்ததுடன், இன்னொரு நலிவுற்றோருக்கு ரூபா 500/- பணவுதவி செய்தனர்.

புட்டளை சத்ய சாயி நிலையத்தினர் இத்தினத்தில் அங்கவீனர் இருவரது வீடுகளுக்கு விஜயம் செய்ததுடன் அவர்களுக்கு உணவுப் பார்சல்களும், உடுப்புக்களும் அன்பளிப்புச் செய்தனர்.

மந்திகை, வியாபாரிமூலை சத்ய சாயி நிலைய அங்கத்தவர்கள் இணைந்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் 1ம், 2ம், 8ம், 9ம் விடுதிகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொடுத்தனர் பார்வை இழந்த ஒரு குடும்பத்தினருக்கு ரூபா 500/- பணவுதவியையும், காலிழந்த ஒருவருக்கு ஒரு சோடி ஊன்று கோலும் வியாபாரி மூலை நிலையத்தினரால் வழங்கப்பட்டன.

## சாயி தீபம் சத்யசாயி நிலையம்; வதிரி

"கடந்த காலம் முடிந்து விட்டது, முடிந்ததை மறந்து விட்டு புதிதாக ஆரம்பி", "சாயி என்ற பெயரைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழுவையும் சாயி நிறுவனத்துடன் இணைப்பதற்கு சகிப்புத் தன்மையுடனும் புரிந்துணர்வுடனும் அணுக வேண்டும்" என்று பகவான் பாபா 70வது பிறந்த தினத்தையொட்டி அறை கூவல் விடுத்தார். இதையடுத்து கடந்த பல வருடங்களாக வதிரியில் தனி நிலையமாக இயங்கி வந்த 'சாயி தீபம்' என்ற நிலையம் சாயி நிறுவனத்துடன் இணைய முடிவு செய்தது.

24-03-1996ல் நடந்த விசேட பஜனையில் அந்நிலையத் தலைவர் திரு வே. கந்தசாமி இணைப்பிற்கான விண்ணப்பத்தை இலங்கை சத்ய சாயி நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர் திரு S. சிவஞானம் அவர்களிடம் கையளித்தார். அதை மகிழ்வுடன் கையேற்ற மத்திய இணைப்பாளர் "நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு பக்தனுக்கும், சுவாமிக்கும் இடையே ஆற்று ஓட்டம் போன்ற தொடர்பு இருக்கிறது. பகவானிடமிருந்து வருகிற ஒவ்வொரு செய்தியும் வழிகாட்டலும் உலக கவுன்சில் தலைவர், மத்திய இணைப்பாளர், பிராந்தியத் தலைவர், நிலையத் தலைவர் என்ற சங்கிலித்தொடர் மூலம் ஒவ்வொரு பக்தனுக்கும் உடனடியாகவும் தெளிவாகவும் கிடைக்கிறது" என்றார். ''பகவானின் வழிகாட்டலைப் பயன் படுத்தி ஒவ்வொரு சாயிபக்தனும் தனது ஆன்மீகப் பாதையைச் செழுமைப் படுத்த வேண்டும்'' என மேலும் கூறினார்.

## இரத்த தானம்

"இரத்தம் என்பது அன்புத் திரவம்; அதைத் தேவைப்படும் ஒருவருக்குக் கொடுத்து ஒரு உயிரைக் காப்பாற்றுங்கள்" என்றார் பாபா. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசரமாக இரத்தம் தேவைப்பட்ட நோயாளிகள் சிலருக்காக அதன் நிர்வாகிகள் வடமராட்சி சத்யசாயி நிலையங்களை அணுகிய போது, நிலைய அங்கத்தவர்கள் முகம் தெரியாத அவர்களுக்கு, எந்தவிதக் கைமாறும் இன்றி உதவி செய்தனர். வியாபாரிமூலை நிலையத்தைச் சேர்ந்த மூவரும், மந்திகை நிலையத்தைச் சேர்ந்த ஒருவரும் அவ்வாறு இரத்த தானம் செய்து உயிர்களைக் காப்பாற்றியதுடன் சுவாமியின் கருணைக்கும் பாத்திரமாயினர்.

எதிர்வரும் 22-09-1996 யை சுவாமி இரத்ததான தினமாக பிரகடனப்படுத்தி உள்ளார். கொழும்பு, மட்டக்களப்பு. திருகோணமலை, யாழ்ப்பாணம். வடமராட்சி ஆகிய இடங்களில் அத்தினத்தில் இரத்ததானம் செய்வதற்கான ஒழுங்குகளை சத்யசாயி நிலையங்கள் செய்து வருகின்றன. பெரும் எண்ணிக்கையில் அங்கத்தவர்கள் இரத்ததானம் செய்து பகவானின் கருணையைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆன்மீகப் பயணம்

காரில் வெளியூர் போகும் போது வழியில் பல அறிவிப்புப் பலகைகளைப் பார்க்கிறோம். அவை உங்கள் இலக்கை அடைவதற்கான வழிகாட்டிகள். அவை உங்களுடன் வருவதில்லை. இதைப்போல் எல்லா ஆன்மீக புத்தகங்களும் அறிவிப்புப் பலகைகள் தான். வழிகாட்டிகள் தான். ஸ்வாமி வெறும் ஒரு அறிவிப்புப் பலகை இல்லை.

ஸ்வாமி உங்களுடனேயே இருக்கிறேன்
உங்களைச் சுற்றி இருக்கிறேன்
உங்கள் முன் இருக்கிறேன்
உங்கள் பின் இருக்கிறேன்
உங்கள் பக்கத்தில் இருக்கிறேன்.

நீங்களே ஸ்வாமியை வேண்டாம் என்று உதறினாலும் நான் உங்களை விடமாட்டேன். ஏனென்றால் நீங்கள் என்னுடையவர்கள். அதனால் உங்கள் பிரயாணம் சௌகர்யமாக அமையவேண்டும் என்று நான் உங்களுடன் பயணம் செய்கிறேன்.

என்னுடைய அறிவுரைகளைக் கேட்டு நடந்தால் உங்கள் பயணம் பத்திரமானதாக இருக்க எல்லாம் செய்கிறேன்.

— பாபா

இதயம் ஒன்றே
அதில் ஒருவருக்கே இடமுண்டு

ஆகையால் ஒரே தெய்வத்தையே
அங்கு வைக்க வேண்டும்.
எந்தப் பெயரையும் உருவத்தையும்
நீங்கள் விரும்புகிறீர்களோ
அதையே வைத்துக் கொள்ளலாம்.
மாற்றக் கூடாது.
ஒருவர் கிணறு தோண்ட
ஐந்தாறு இடங்களில்
20 அடி, 10 அடி என்று தோண்டிப் பார்ப்பது
வீண் பிரயாசை.
ஒரே இடத்தில்
ஆழமாகத் தோண்டுவது தான்
தண்ணீர் கிடைக்க சரியான முயற்சி.
ஒரே தெய்வம் ஒரே பெயர் என்று
நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்.

— பாபா

வி. ந. நி. அச்சகம் — பருத்தித்துறை.